விலை: 30.00
பக்கங்கள் : இருபது

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 10 திங்கட்கிழமை (26.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 219

## வெலிக்கடைப் படுகொலையின் 38ஆவது நினைவேந்தல் யாழில் நேற்று அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி மற்றும் தங்கதுரை ஆகியோரின் 38ஆவது நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழ் தேசிய கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது உயிரிழந்தவர்களது திருவுருவப் படத்திற்கு மலர்மாலை போட்டு விளக்கேற்றி 19

### கொரோனாத் தொற்றுக்கிலக்காகி
## கபிடல் குழுமத் தலைவர் ராஜமகேந்திரன் உயிரிழப்பு



(கொழும்பு)

தி கபிடல் மகாராஜா குழுமத்தின் தலைவர் ஆர்.ராஜமகேந்திரன் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார். அவருக்கு வயது 79.

கோவிட்-19 நோய்த் தொற்றால் 19

### மீசாலைப் பகுதியில்
## பெண் ஒருவர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி - மீசாலை பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீசாலை வடக்கு வேம்பிராய் பகுதியைச் சேர்ந்த 61 வயதான பெண் ஒரு 19

### பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாவிட்டால்
# புதிய கொரோனா வகைகள் எதிர்காலத்தில் உருவாகலாம்
### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி எச்சரிக்கை



(கொழும்பு)

**நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் சுகாதார வழிகாட்டுதல்களை பொது மக்கள் சரியாக பின்பற்றாது விட்டால் எதிர்காலத்தில் புதிய கொரோனா வகைகள் உருவாகலாம் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயண கட்டுப்பாடு பகுதியளவில் தளர்த்தப்பட்ட நிலையில் நாட்டில் கொரோனா நோயாளர்கள் மற்றும் இறப்புகள் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

டெல்டா கொரோனா வைரஸானது நாடு முழுவதும் வேகமாகப் பரவி வருவதனை சுட்டிக்காட்டிய 19

### நாட்டில் நேற்றும்
## 1656 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

இலங்கையில் 3ஆவது அலை கொரோனாத் தொற்று பரவலாக உருவெடுத்துள்ள புதுவருட கொத்தணியில் மேலும் 1,656 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக 19

### வவு.ஈச்சங்குளம் பகுதியில்
## இளைஞர் குழு தாக்கியதில் நால்வர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் மதுபோதையில் சென்றவர்கள் தாக்கியதில் பெண் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக 19

### 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு
## தடுப்பூசி போட்ட பின்னரே நாடு திறக்கப்படும் – பந்துல



(கொழும்பு)

30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் செப்ரெம்பர் மாதத்திற்குள் கோவிட்-19 தடுப்பூசி போடப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன 19

### கொரோனாவால்
## 45 பேர் மரணம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 19

## பயணக் கட்டுப்பாடுகள் தளர்வு தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்
### சிறப்பு மருத்துவர்கள் சங்கம் வலியுறுத்து



(கொழும்பு)

நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட விதம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று சிறப்பு மருத்துவ வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர், மருத்துவ வல்லுநர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதன்படி, திருமண நிகழ்வுகள் 19

### சுன்னாகம் குண்டுக்குளம் பகுதியில்
## இளைஞனை வழிமறித்து வாள்வெட்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் - குண்டுக்குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குண்டுக்குளம 19

### மக்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால்
## நான்காவது அலையை தடுக்க முடியாது
### மருத்துவர் ஹேமந்த எச்சரிக்கை

3ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியர் கோவிட் கொத்தணி விரைவில் உருவாகும் அபாயம்
### பேராசிரியர் சன்ன ஜயசுமன எச்சரிக்கை

(கொழும்பு)

விரைவில் ஆசிரியர் கோவிட் கொத்தணியொன்று உருவாகக் கூடும் என ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# டெல்டா பரவலால் நான்காவது அலை ஏற்படுமாயின் பாரிய அழிவை நாடு எதிர்கொள்ள நேரிடும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)

**நாட்டில் கோவிட் பரவல் நான்காவது அலை ஏற்படுமாயின் அதற்கான பிரதான காரணி டெல்டா வைரஸாகவே காணப்படும். இந்தியா மற்றும் பிரேசில் உள்ளிட்ட வளர்ச்சியடைந்த நாடுகளில் டெல்டா பரவலானது பாரிய அழிவை ஏற்படுத்தியது. எனவே இலங்கையில் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாயின் அது கட்டுப்படுத்த முடியாததாகிவிடும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.**

எனவே சமூகத்திலுள்ள டெல்டா தொற்றாளர்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும் என்பதோடு, நான்காவது அலை உருவாகுவதையும் தடுக்க வேண்டும். அதற்கு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதோடு சுகாதார விதிமுறைகளையும் மிகவும் இறுக்கமாக பின்பற்ற வேண்டும் என்றும் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் நான்காவது கோவிட் அலை உருவாகக் கூடும் என்றும், மேலும் பல டெல்டா தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கக் கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசிகள் வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் அது மாத்திரமே வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வாக அமையாது. சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவதும் அத்தியாவசியமானதாகும். காரணம் எந்த வகைத் திரிபுகளாகக் காணப்பட்டாலும் அவை பரவும் வழிமுறை ஒரே மாதிரியானதாகவே காணப்படும்.

நாட்டில் 68 டெல்டா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள அதேவேளை, அது பரவும் வேகமும் மிகவும் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கோவிட் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை விட டெல்டா தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு பாதிப்புக்களானது 1000 மடங்கு அதிகமாகக் காணப்படுவதாக ஆய்வுகளில் தெரிய வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஞா)

# சிறுமி உயிரிழந்த விவகாரம் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் முக்கிய தடயப் பொருட்கள் சிக்கின

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் சிறுமி உயிரிழந்த விவகாரம் தொடர்பிலான தொடர் விசாரணையின் பின்னர் நேற்று சில தடயப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரிஷாத் பதியுதீனின் மனைவி, மாமனார் உட்பட 30 பேரிடம் தொடர் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில்,

நேற்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் முதித்த விதானபத்திரண உள்ளிட்ட அதிகாரிகள் ரிஷாத் பதியுதீன் வீட்டில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போதே சில முக்கியமான தடயப் பொருட்கள் சிக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், மண்ணெண்ணெய் போத்தல் ஒன்று, லைட்டர் ஒன்று, எரிந்த நிலையில் மீட்கப்பட்ட ஒருசோடி பாதணி என்பன தடயங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன.

குறித்த தடயப் பொருட்கள் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணையைத் தொடங்கியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவருடைய உடலில் 75 வீதமான பாகங்கள் எரிந்தநிலையில் காணப்பட்டமையால் அவரிடம் வாக்குமூலம் பெறமுடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் புதிதாக இரண்டு குளங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றை அண்மித்த 400 ஏக்கர் பகுதியில் புதிதாக இரண்டுகுளங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின்கீழ், ரூபா 20 மில்லியன் செலவில் இந்த இரு குளங்களும் அமைக்கப்படவுள்ளன. சுமார் 300 அடி நீளமும், 180 அடி அகலமும், 10 அடி ஆழமுங் கொண்டனவாக இந்த இரு குளங்களும் அமைக்கப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர், அறிவியல் நகரில் அமைந்துள்ள பொறியியல் பீடம், விவசாய பீடம் மற்றும் தொழில் நுட்ப பீடம் ஆகியவற்றின் பீடாதிபதிகள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா குளம் வெட்டும் பணிகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

விவசாய பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் பகுதிகளில் அமைந்துள்ள பண்ணைகளுக்கான நீர்த் தேவைக்கு இந்த இரு குளங்களும் பயன்படுத்தப்படவுள்ளன. (ஞா)

# 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வவுனியாவில் தடுப்பூசி ஏற்றும் பணி எதிர்வரும் புதன் ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திற்கு எதிர்வரும் புதன் கிழமை முதல் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதற்கு விசேட நடவடிக்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வவுனியா மாவட்டத்தில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளது. தடுப்பூசி ஏற்ற தகுதியுடையவர்களின் விபரங்கள் பிரதேச செயலகத்தின் ஊடாக சேகரிக்கப்படுகின்றன.

தடுப்பூசிகளை மக்களுக்கு ஏற்றுவதற்காக பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள் என்பன சுகாதார பிரிவினரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்திற்கு சினோபாம் அல்லது பைஸர் தடுப்பூசி கிடைக்கப் பெறும் என சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட 1000 நபர்கள், சுகாதார பிரிவினர், தபால் சேவை பிரிவினர், பாதுகாப்பு பிரிவினர் ஆகியோருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஞா-250,299)

# ஜனாதிபதி - சுதந்திரக் கட்சி இன்று கலந்துரையாடல்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் இடையே விஷேட கலந்துரையாடல் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 11.00 மணிக்கு இந்த கலந்துரையாடல் நடைபெறும் என இலங்கை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலுக்கு முன்னர், கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாட திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஞா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால் நான்காவது அலையை தடுக்க முடியாது

## மருத்துவர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை



(கொழும்பு)

**நாட்டில் டெல்டா வைரஸினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மக்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால் நான்காவது அலையைத் தடுக்க முடியாது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

நாட்டில் இதுவரை 68 பேர் டெல்டா திரிபு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும், இதனை விட அதிகளவான தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கக்கூடும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். இந்நிலை தொடருமானால் இலங்கையில் 4 ஆவது கொவிட் அலை ஆரம்பமாகக் கூடும் எனவும் வைத்தியர் ஹேமந்த ஹேரத் எச்சரித்துள்ளார்.

மேலும் நாட்டு மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, தற்போதைய மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்த பொறுப்புடன் செயற்பட்டால், 4 ஆவது கொவிட் அலையை கட்டுப்படுத்த முடியும் என்றார். (நி-5)

## அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

தனியார் துறையினால் அதிகளவில் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களை அரச நிறுவனம் ஒன்றின் ஊடாக நேரடியாக நாட்டுக்கு கொண்டு வர வர்த்தகத்துறை அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் தற்போது அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் தனியார் பிரிவின் தன்னிச்சையான செயற்பாடு என்பவற்றை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்

இதன்படி தற்போது கலைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அரச வணிக கூட்டுறவு மொத்த வர்த்தக நிறுவனத்தை மீண்டும் வலுப்படுத்தி அதன் ஊடாக குறித்த பொருட்களை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



சீனி, கோழி இறைச்சி, தேங்காய் எண்ணெய், பருப்பு, வெங்காயம், கிழங்கு போன்ற அத்தியாவசிய பொருட்களை அந்த நிறுவனம் ஊடாக நேரடியாக இறக்குமதி செய்ய எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (நி-5)

## மாணவனுக்கு உறுதியானது டெல்டா




(கொழும்பு)

இலங்கையில் முதல் தடவையாக 5 ஆம் தரத்தில் பயிலும் மாணவனுக்கு டெல்டா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

களுத்துறை, பேருவளை பிரதேசத்தில் உள்ள மாணவனுக்கே இவ்வாறு தொற்று றுதி செய்யப்பட்டது.

தற்போது அவர் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவருடன் தொடர்பில் இருந்தவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதார தரப்பினர் களமிறங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (நி-5)

## பெண்களின் பாதுகாப்பிற்காக இறுதிவரை போராடுவோம்

### சஜித் பிரேமதாஸ



(கொழும்பு)

இலங்கையில் குழந்தைகள் மற்றும் பெண்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழல் இல்லாது போகும் நிலை உருவாகி வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்புக்காக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் முன்னிற்கும். துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் நீதி கிடைக்க ஐக்கிய மக்கள் சக்தி இறுதிவரை பாடுபடும் என அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட சமூக ஊடக ஆர்வலர்கள் எதிர்க்கட்சித் தலைவரை நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்த அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பெண்களுக்கு எதிரான வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் என்பன அதிகரித்துள்ளன.

பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகத்திலும் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகத்திலும் யார் ஈடுபட்டாலும் அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இன, மத, மொழி, பதவி நிலை கடந்து தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

இந்த நாட்டில் தாய்மார்களுக்காகவும் சிறுவர்களுக்காகவும் நாம் எப்போதும் துணை நிற்போம்.

சகலருக்கும் சமமான நீதி கிடைக்க வேண்டும். எனினும், தற்போது நாட்டில் நீதியானது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் கிடைக்கின்றது" என சஜித் தெரிவித்தார். (நி-5)

## நாட்டின் பொருளாதார நிலை மோசமடையும் அபாயம்

### முன்னாள் நிதியமைச்சர் மங்கள

(கொழும்பு)

சிம்பாவே மற்றும் வெனிசுவேலா நாடுகளுக்கு நேர்ந்த நிலைமை இலங்கைக்கு ஏற்படக்கூடிய அபாயம் உருவாகியுள்ளது என முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் நகர்வொன்றை ஆரம்பிக்கும் நோக்கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை தற்போதைய அரசாங்கத்திடம் ஒப்படைத்த போது தாம் நிதி அமைச்சராக பதவி வகித்ததாகவும் அப்போது அந்நிய செலாவணி கையிருப்பு 7.6 பில்லியன் டொலர்கள் காணப்பட்டதாகவும் அந்தத் தொகை எதிர்வரும் நாட்களில் 2.6 பில்லியன் டொலர்களாக வீழ்ச்சியடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் அந்நிய செலாவணி கையிருப்பு மிகவும் வீழ்ச்சியடையும் சந்தர்ப்பமாக இது கருதப்பட வேண்டும்.

கடந்த 2020ஆம் ஆண்டில் அரச வருமானங்கள் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் வரவு- செலவுத் திட்ட இடைவெளியும் பாரியளவில் அதிகரித்துள்ளது.

இந்த அரசாங்கம் நினைத்துப் பார்க்க முடியாத அளவு பணத்தை அச்சிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாட்டில் காணப்பட்ட பொருட்களுக்கு வரிசையில் நிற்கும் காலத்தை விடவும் மோசமான சிம்பாவே மற்றும் வெனிசுவேலா போன்ற நாடுகளின் பொருளாதார நிலைமைக்கு இலங்கை செல்லக் கூடிய ஆபத்து காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் உரத்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அமெரிக்க டொலர் பற்றாக் குறையினால் வெளிநாடுகளிலிருந்து மருந்துப் பொருட்கள் தருவிக்க முடியவில்லை.

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் அவ்வாறு ஏற்பட்டால் அதனை அரசாங்கம் மூடி மறைத்து விட்டு உடல் நலத்திற்கு நன்மை ஏற்படும். அதனால் சைக்கிளில் பயணிக்குமாறு கோரப்படக் கூடும்.

தேசப்பற்று என்ற போலி கொள்கைகளின் காரணமாக இந்த நாடு பல தசாப்தங்களாக பின்னோக்கி நகர்ந்து சென்றுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். தேசப்பற்று என்று மக்களை ஏமாற்றிய அரசாங்கத்தை மட்டுமன்றி அதற்கு ஏமாற்றமடைந்த மக்களும் இந்த அழிவிற்கு பொறுப்பாவர் என அவர் தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ தோல்வியடைந்தார் என்பதனை விடவும் அவர் பிரதிநிதித்துவம் செய்த கொள்கைகளே இன்று தோல்வியடைந்துள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் துடுப்பு படகு போட்டி அரையிறுதிக்குள் இந்திய அணி




ஒலிம்பிக் துடுப்பு படகு போட்டியில் ஆண்களுக்கான லைட் வெயிட் இரட்டையர் ஸ்கல்ஸ் பிரிவில் இந்திய அணி அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

டோக்கியோ ஒலிம்பிக்கில் துடுப்பு படகு போட்டியில் ஆண்களுக்கான லைட்வெயிட் இரட்டையர் ஸ்கல்ஸ் ஹீட் தகுதிச் சுற்று போட்டிகள் நேற்று அதிகாலை நடைபெற்றது. இதில், இந்தியா தரப்பில் அர் ஜுன் லால் ஜாட் - அரவிந்த் சிங் ஜோடி பங்கேற்றது.

தகுதிச்சுற்றின் ஒவ்வொரு பிரிவிலும் தலா 6 அணிகள் பங்கேற்கும். அதில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணி நேரடியாக அரையிறுதிக்கு தகுதிபெறும்.

எஞ்சிய 4 அணிகள் அரையிறுதி சுற்றுக்கு முந்தைய சுற்றான ரிபிசேஜ் சுற்றுக்கு செல்லும். ரிபிசேஜ் சுற்றில் முதல் 3 இடங்களுக்குள் நுழைந்தால் அரையிறுதி தகுதி பெறலாம்.

இதனிடையே, ஹீட் தகுதிச் சுற்றில் இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட இலக்கை 6:40.33 நிமிடங்களில் அடைந்து 5 ஆம் இடம் பிடித்தது. இதனால் அரையிறுதி சுற்றுக்கு முந்தைய சுற்றான ரிபிசேஜ் சுற்றுக்கு சென்றது.

ரிபிசேஜ் சுற்றில் இந்திய அணி 3 ஆம் இடம் பிடித்தது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை 6:51.36 நிமிடங்களில் கடந்து 3 ஆம் இடம் பிடித்தது.

இதனால், இந்திய அணி ஆண்கள் லைட்வெயிட் டபுள் ஸ்கல்ஸ் பிரிவில் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. அரையிறுதிப்- போட்டி நாளை நடைபெறவுள்ளது. (4-6)

# முதல் சுற்றில் வெற்றி பிவி சிந்து முன்னேற்றம்




டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்திய வீராங்கனை பிவி சிந்து முதல் சுற்றில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் பட்மிண்டன் போட்டியில் இந்திய வீராங்கனை பிவி சிந்துவும், இஸ்ரேல் வீராங்கனை செனியா பெர்லிகர்போவா ஆகியோர் நேற்றுக் காலை மோதினர்.

இதில் பிவி சிந்து அதிரடியாக ஆடி 21-7, 21- 10 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (4-6)

# ஆப்கான் - பாகிஸ்தான் ஒரு நாள் தொடர் இலங்கையில்




ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து இலங்கைக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி இந்தத் தொடர் செப்டெம்பர் முதலாம் திகதி அம்பாந்தோட்டை, மகிந்த ராஜபக்ஷ மைதானத்தில் ஆரம்பமாகும் என ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் குறித்த தினங்களில் மைதானங்கள் கிடைக்காத காரணத்தினால் இந்த தொடர் இலங்கைக்கு மாற்றப்பட்டுள்ளது. (4-6)

# அவுஸ்திரேலியா அசத்தல் உலக சாதனை படைத்த வீராங்கனைகள்



டோக்கியோ ஒலிம்பிக்கில் நடந்த பெண்களுக்கான நீச்சல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி உலக சாதனை படைத்துள்ளது.

நீச்சல் போட்டியில் பெண்களுக்கான 4X100 மீ ஃப்ரீஸ் டைல் ரிலேவில் அவுஸ்திரேலிய அணி 3:29.69 நிமிடங்களில் பந்தய தூரத்தை கடந்து உலக சாதனை படைத்துள்ளனர்.

நீச்சல் போட்டியில் பெண்களுக்கான 4X100 மீ ஃப்ரீஸ் டைல் ரிலேவில் அவுஸ்திரேலிய அணி உலக சாதனை படைத்து தங்கம் வென்றது.

கனடா அணி (3:32.78) இரண்டாவது இடத்தை பிடித்து வெள்ளிப் பதக்கத்தையும், அமெரிக்க அணி(3:32.81) 3 ஆவது இடத்தை பிடித்து வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது.

இதற்கு முன்2018இல்பெண்களுக்கான 4X100மீ.ஃப்ரீஸ்டைல் ரிலேவில் 3:30.05 நிமிடங்களில் கடந்து அவுஸ்திரேலிய அணி உலக சாதனை படைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (4-6)

# டோக்கியோ ஒலிம்பிக்

- 4 தங்கங்களுடன் சீனா முதலிடம்
- ஜப்பான் இரண்டாமிடம்
- அமெரிக்கா மூன்றாமிடம்




டோக்கியோ ஒலிம்பிக்கில் நேற்று இடம்பெற்ற டைவிங் போட்டியில் சீனாவின் இரு வீராங்கனைகள் தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளனர்.


ஷி டிங்மாவ் (வயது-30) மற்றும் வாங் ஹான் (வயது-20) ஆகியோர் மொத்தம் 326.40 புள்ளிகளைப் பெற்றனர். 25.62 புள்ளிகளால் எளிதாக வென்றனர்.

நடைபெற்ற போட்டிகளில் சீனா 4 தங்கங்களையும் ஒரு வெள்ளியையும் 3 வெண்கலத் துடன் 8 பதக்கங்களுடன் முதல் நிலையில் உள்ளது.

இரண்டாவது இடத்தில் ஜப்பானும், 3 ஆம் இடத்தில் அமெரிக்காவும் உள்ளது. (4-6)

# தேவை ஏற்பட்டால் அட்டவணைகளில் மாற்றம்

## ஒலிம்பிக் கமிட்டி



கடுமையான வெப்பம் மற்றும் ஈரப்பதம் ஆகியன டோக்கியோ ஒலிம்பிக் போட்டி அட்டவணைகளில் மாற்றங்களை ஏற்படுத்த கட்டாயப்படுத்தக்கூடும் என சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி நேற்று அறிவித்துள்ளது.

டோக்கியோவில் தற்போது தினசரி வெப்ப நிலை 33 டிகிரி செல்சியஸ் ஆக பதிவாகியுள்ளது.

இந் நிலையில் அதிகமாக இருக்கும் வெப்ப நிலையில் போட்டியிடுவது தங்களது செயல் திறனை தடுத்து நிறுத்தியதாக பல விளையாட்டு வீரர்கள் முறைப்பாடு அளித்துள்ளனர்.

அது மாத்திரமன்றி அதிக ஈரப்பதமும் வீரர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (4-6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் துறைசார் அமைச்சிற்கு உண்டு

## தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் மூலம் அமைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை எதிர்வரும் 2023 பெப்ரவரி-10 வரை ஒத்தி வைக்கும் அதிகாரமும் துறைசார்ந்த அமைச்சருக்கு உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.**

இலங்கையின் அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் நிறைவுபெற்ற போதிலும், மாகாண சபைத் தேர்தல் தொடர்ச்சியாக பிற்போடப்பட்டு வருகின்ற நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான காலம் தற்போது நெருங்குகிறது.

2018 ஆம் ஆண்டு இறுதியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்ற நிலையில், அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக அந்தத் தேர்தல்களை நடத்த வேண்டும்.

2017-16 ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டிய திகதிக்கு, ஆறு மாதங்களுக்கு முன்னர் இருந்து, அவசியமான அந்தத் தேர்தலை நடத்தும் அதிகாரமுள்ளது.

அவசியமாயின், உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நிறைவடைந்து 16 நாட்களின் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ள சூழ்நிலையில், கொவிட்-19 பரவல் காரணமாக, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையும் பிற்போட நடவடிக்கை எடுக்கப்படுமாயின், விடயத்துடன் தொடர்புடைய அமைச்சருக்கு ஒரு ஆண்டு காலம் வரையிலேயே அதற்கான அதிகாரமுள்ளது.

இதற்கமைய, அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி, தேர்தலை நடத்தாமல், 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 திகதிவரை அதனை பிற்போடுவதற்கு, அதிகாரம் உள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-5)

# இரண்டு கார்கள் மோதி விபத்து



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் இரண்டு கார்கள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன் கார் பலத்த சேதமடைந்துள்ளது.

நேற்று மட்டக்களப்பு நகரின் மணிக்கூண்டு கோபுர சந்தியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இரண்டு கார்கள் மோதிக் கொண்ட நிலையில் ஒருகார் தடம்புரண்டதனால் அதில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த பகுதிக்கு சென்ற மட்டக்களப்பு பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5)

# இலவசக் கல்வி உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்

## வலியுறுத்தி பூண்டுலோயாவில் போராட்டம்

(கொழும்பு)

ஜோன் கொத்தலாவ தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலத்தை மீளப் பெறுமாறும் இலவசக் கல்வி உரிமையைப் பாதுகாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி பூண்டுலோயாவில் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் அக்கட்சியின் அரசியல் செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இளைஞர்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கல்வியை தனியார் மற்றும் இராணுவமயப்படுத்துவதற்கு இடமளிக்கக்கூடாது எனவும் மேலும் நாட்டில் நிலவும் உரத் தட்டுப்பாட்டால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் அனைத்து மக்களும் எதிர்நோக்கியுள்ள அத்தியாவசியப் பொருட்கள் உட்பட ஏனைய பொருட்களின் விலையை உடனே குறைக்குமாறும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்தனர். (நி-5)

# உலகளவில் எதிர்வரும் வாரங்களில் 200 மில்லியனாக அதிகரிக்கும் 'டெல்டா'

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

(ஜெனிவா)

உலகளாவிய ரீதியில் எதிர்வரும் வாரங்களில் 200 மில்லியனுக்கும் மேற்பட்டோர் டெல்டா கொரோனா வைரஸ் பிறழ்வுடன் அடையாளம் காணப்படலாமென உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலகளாவிய ரீதியில் இதுவரை 124 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் டெல்டா பிறழ்வு பரவியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், எதிர்வரும் காலத்தில் டெல்டா கொரோனா வைரஸ் உலகளாவிய ரீதியில் பிரதான வைரஸாக மாறுமெனவும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனிடையே, குறிப்பாக ஐரோப்பிய மற்றும் மேற்கு பசுபிக் பிராந்தியங்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சில மேற்கத்தேய நாடுகளில் கொவிட் மரணங்கள் குறைவடைந்துள்ளமையால், அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், தடுப்பூசி வேலைத்திட்டம் மந்தகதியாக முன்னெடுக்கப்படும் நாடுகளில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் செயற்பாடானது எதிர்காலத்தில் அச்சுறுத்தலாக மாறக்கூடுமென உலக சுகாதார ஸ்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)


# அறை வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் பலாலி வீதியை முகப்பாக கொண்ட பெற்றோல் நிலையத்திற்கு எதிர்ப்பக்கத்திலுள்ள கட்டடத்தில் தனி வழிப்பாதை கொண்ட இணைந்த குளியலறைத் தளபாடங்கள் மற்றும் சமையல் வசதி கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு. (7443)

தொடர்பு: 077 953 0496, 077 496 7141 } Whats App


# 1 கோடி 21 லட்சம் தடுப்பூசிகள் இதுவரை கிடைத்துள்ளன

## சன்ன ஜயசுமன

(கொழும்பு)

இலங்கைக்கு இதுவரையில் ஒரு கோடியே 21 இலட்சத்து 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட கொரோனாத் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். அவற்றுள் நூற்றுக்கு 72 சதவீதமானவை அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக இலங்கை ரூபாயில் ஆயிரத்து 546 கோடி செலவழித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், எதிர்காலத்தில் சீனாவிடம் இருந்து 16 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் அன்பளிப்பாக கிடைக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இதுரையில் 80 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளையும் 5 இலட்சம் அஸ்ட்ராஜெனேகா தடுப்பூசிகளையும் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ஸ்புட்னிக் வீ தடுப்பூசிகளையும் ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 830 பைஸர் தடுப்பூசிகளையும் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


# 61 ஆவது பிறந்த நாளும் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

## அமரர். புத்திசிகாமணி உதயராணி (உதயம்)

திதி: திருதியை

மனம் மகிழ 1960.07.02

மனம் நெகிழ 2019.07.20



அம்மா ஆண்டுகள் இரண்டானதம்மா
ஆறவில்லை எம் துயரம்
தந்தையை இழந்து தவித்தபோது- எமை
ஆலவிருட்சம் போல் தாங்கி
குறையேதும் இன்றி-உம்
உதிரத்தை உணவாக்கி- ஊட்டி வளர்த்த தெய்வமே
எப்படி மறப்பது உங்களை வாட்டுதம்மா எமை
தாயில்லாக் கொடுமையைப் போல்
வேறொன்றுமில்லையம்மா பாரினிலே
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மந்திரிமனை, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் அரிசி இனங்களைப் போல் பாசுமதி அரிசி இனத்தையும் ஊக்குவிக்க வேண்டும்

## யாழ்.அரச அதிபர்

**(யாழ்ப்பாணம்)**

**மனைப் பொருளாதாரத்தின் ஊடாக கிராமிய பொருளாதாரத்திற்கான சந்தைப்படுத்தலுக்கான விவசாயத்தினை ஊக்குவிக்க பல்வேறு வேலைத்திட்டங்கள் உருவாக்கப்படும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.**



அரசாங்கத்தின் விவசாய கொள்கைத் திட்டத்தின் கீழ் சேதனப் பசளையின் ஊடாக பயிர்ச்செய்கையினை முன்னெடுப்போம் என்னும் கருப்பொருளுக்கு அமைய சேதனப்பசளை ஊடாக பாசுமதி நெற்பயிர்ச் செய்கைக்கான அறுவடையினை அங்குராப்பணம் செய்யும் நிகழ்வு நேற்று யாழ்.மருதடி பகுதியில் ஜே /77 கிராம உத்தியோகத்தர் பிரிவில் விநாயகமூர்த்தி சகாதேவன் என்பவரின் வீட்டுத் தோட்டத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதற்காக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ்.பல்கலைக்கழக விவசாயத்துறை பீட பேராசிரியர் எஸ்.மிகுந்தன் ஆகியோர்கள் கலந்துகொண்டு வீட்டுத்தோட்டத்திலான பாசுமதி நெற்பயிர்ச் செய்கையினை அறுவடைக்கான அங்குராப்பணத்தினை செய்து வைத்தனர். இதில் கலந்து கொண்டபின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், இவ் நெல் இனம் உயர்ந்த பட்சமாக பயிர்ச் செய்கையாக இருந்தாலும் அதன் தன்னிறைவினை எட்டக்கூடிய வகையில் இது முன்னுதாரணமாகக் காணப்படுகின்றது.

குறிப்பாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்கின்ற இந்த பாசுமதி அரிசியாக இருந்தாலும் அவற்றினையும் யாழ். மாவட்டத்தில் இருந்து நெற்பயிர்ச்செய்கையினை இயற்கை சேதனப் பயிர்ச் செய்கை மூலமாக செயற்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார். உள்ளூர் அரிசியான மொட்டைக் கறுப்பான், கீரிச்சம்பா, பொன்னியரசி, நாட்டு அரிசி, முத்துச்சம்பா, உள்ளிட்ட சாதாரண அரிசி வகைகளைப் போல் அவ்வாறான நிலைமைக்கு இப்பாசுமதி அரிசி இனத்தினையும் ஊக்குவிக்க வேண்டும் என தெரிவித்தார். (4-8-6-33)

## சங்கடஹர சதுர்த்தி உற்சவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணை வடகிழக்கு கலட்டி ஞ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டபப் பூசை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வரவுள்ளார் என ஆலயப் பிரதம குரு அறிவித்துள்ளார். (4-8)




# வீதித் தடையினை அமைத்து வேகக்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துங்கள்

## பிரதேச சபை உறுப்பினர் வலியுறுத்து

(சாவகச்சேரி)


சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட சங்கத்தானை-பெருங்குளம் இணைப்பு வீதியில் வீதித்தடை அமைத்து வேகக்கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்த சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென நகரசபை உறுப்பினர் சு.நிதிகேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் அமையப் பெற்ற குறித்த காப்பெற் வீதியில் வேகத் தடை ஏற்படுத்தப்பட வேண்டும் என நகர சபையில் வலியுறுத்தி ஒரு வருடம் கடந்த நிலையிலும் கூட அத்தீர்மானம் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

சங்கத்தானை புளியடிச் சந்திப் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் சில வருடங்களுக்கு முன்னர் இராணுவ வாகனம் விபத்துக்குள்ளான போது உடனடியாக குறித்த புகையிரதக் கடவை மூடி அடைக்கப்பட்டது.

ஆனால் இன்று குறித்த இணைப்பு வீதியில் குறுகிய காலத்திற்குள் 13 பேர் விபத்தில் சிக்கி காயமடைந்துள்ளனர். இருப்பினும் இன்றுவரை விபத்தை தவிர்க்க நடவடிக்கை ஏதுமில்லை என மேலும் அவர் தெரிவித்தார். (4-7-6-18)

# விபத்து; இருவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்று இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் தட்டாதெரு சந்தியை அண்மித்த பகுதியில் நேற்று குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, யாழில் இருந்து வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று, காருடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது காயமடைந்த இருவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (4-6-8)

# தமிழகத்திலிருந்து சட்டவிரோதமாக இலங்கை வந்த யாழ்.வாசிகள் இருவர் கைது


(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் இருந்து சட்டவிரோதமாக இலங்கை வந்த இலங்கையைச் சேர்ந்த இருவர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

சமீபகாலமாக இலங்கையைச் சேர்ந்த மக்கள் சட்டவிரோதமாக தமிழகம் சென்று தமிழகத்தில் இருந்து கனடா செல்வதற்காக முயற்சி செய்து வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி சட்டவிரோதமாக தமிழகம் சென்று பின் பெங்களூரில் இருந்து விமானம் மூலமாக கனடா செல்வதற்காக பெங்களூர் விமான நிலையம்சென்றபோது அவர்கள் கைது செய்யப்பட்டு பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டதையடுத்து தமிழகத்தில் இருந்து சட்டவிரோதமாக இலங்கை யாழ்ப்பாணத்திற்கு கள்ளத்தோணியில் வந்துள்ளனர். இவர்களை இலங்கை அல்லைப்பிட்டி தீவில் வைத்து இலங்கை கடற்படையினர் கைது செய்ததுடன் இருவரையும் சட்டவிரோதமாக அழைத்து வந்த யாழ்பாணத்தை சேர்ந்த படகோடிகள் இருவர் என மொத்தமாக நான்கு பேரையும் கைது செய்த இலங்கை கடற்படையினர் தொடர்ந்து அவர்களிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (4-8-6-100)



வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி மற்றும் தங்கதுரை ஆகியோரின் 38 ஆவது நினைவேந்தல் யாழ்ப்பாணம் தமிழ்த்தேசிய கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. (படம்:-கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்களே அதிகளவில் உயிரிழக்கின்றனர்

## சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**கொவிட் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களே அதிகளவில் உயிரிழப்பதாகவும் அதிகளவில் நோய்த் தொற்றுக்கு இலக்காவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

கொவிட் மூன்றாம் அலையின் முடிவினை காணவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோய்த் தொற்றாளிகள் குறைவடைந்ததாகவும் அண்மைய நாட்களில் மீளவும் நோய்த் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



கடந்த மூன்று வாரங்களில் பதிவான மரணங்கள் தொடர்பில் ஆராய்ந்த போது கொவிட் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்களே அதிகளவில் மரணித்துள்ளதுடன் நோய்த் தொற்றுக்கும் இலக்காகியுள்ளனர் என தெரிவித்தார்.

60 வயதுக்கும் மேற்பட்ட அனைத்து முதியவர்களும் எந்தத் தடுப்பூசி என வகைப் பிரிக்காது கிடைக்கும் தடுப்பூசியை உடன் போட்டுக் கொள்ள வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)

# மனிதநேயம் மரணிக்கவில்லை; தென்னிலங்கை மக்கள் நெகிழ்ச்சி

(கொழும்பு)

மனிதாபிமானமற்ற சமூகத்தில் மீண்டும் மீண்டும் பிரகாசிக்கப்படும் தமிழரான நீதிபதி இளஞ்செழியனின் மனிதநேயம் மாறியுள்ளது என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் உயர் நீதிமன்ற நீதிபதியாக செயற்பட்ட மாணிக்கவாசகம் இளஞ்செழியன் மீது கொலைமுயற்சிமேற்கொள்ளப்பட்டது. இதன்போது அவரது மெய்பாதுகாவலரான சரத் ஹேமசந்திர என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்தார்.

சரத் ஹேமசந்திர உயிரிழந்து 4 வருடங்கள் நிறைவடைந்த நிலையில், கடந்த 22ஆம் திகதி நீதிபதி இளஞ்செழியன் தலைமையில் சிலாபத்தில் தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

உயிரிழந்த ஹேமசந்திரவின் கல்லறையில் விளக்கேற்றி, வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், குடும்பத்தாருடன் தானம் வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டார்.

பொலிஸ் அத்தியட்சகர் உயிரிழந்த பின்னர் அவரது பிள்ளைகள் இரண்டினையும் தனது பிள்ளைகளாக கருதும் நீதிபதி, அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவி



செய்து வருகின்றார்.

ஹேமசந்திர உயிரிழந்த தினத்தன்று அவரது மனைவியின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கும் அளவிற்கு உணர்ச்சிவசப்பட்ட மனிதநேயமிக்க நீதிபதி இளஞ்செழியன் தற்போது திருகோணமலை நீதிபதியாக செயற்படுகின்றார் என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதேவேளை பேஸ்புக்கில் நீதிபதியை வாழ்த்தி தென்னிலங்கையை சேர்ந்த பலரும் பதிவுகளை பதிவிட்டுள்ளனர். அந்த பதிவில், உண்மையான மனிதன், கல்லறையில் வணங்கி விட்டு மாத்திரம் செல்லாமல் பொலிஸ் அதிகாரியின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருக்கும் செயலுக்கு பாராட்டுகளை தெரிவிக்க வேண்டும். இலங்கை சிறந்த மனிதாபிமானமுள்ள இந்த மனிதனுக்கு எங்கள் மரியாதை எப்போதும் உண்டு என பதிவிட்டுள்ளனர். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா:30செவ் 9 சூரி1 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: **BBA**,அபிவிருத்தி உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு:தனியார்,அரச உத்தியோகம்<br>தொ.இ: **B/11983** | பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: **63 ½** செவ் 4சூரி7 இல்<br>உயரம்:**160cm**<br>தகைமை/தொழில்:.**Post Master**<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்விரும்பத்தக்கது<br>தொ.இ:**G/5756** |
| பிறப்பு:1989 இந்து நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 13செவ் 3 சூரி1 இல்<br>உயரம்: **167cm**<br>தகைமை/தொழில்:**M.Sc,PGDE,B.A, Teacher**<br>எதிர்பார்ப்பு:அரச.தனியார் உத்தியோகம்<br>தொ.இ: **B/11984** | பிறப்பு:1987 இந்து நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா:**31 ¼** செவ் 5 சூரி4 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: **HNDA,** முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:அரசதொழில்<br>தொ.இ:**G/5762** |
| பிறப்பு:1982 இந்து நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா: -செவ் 10 சூரி5 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: அரச கால்நடைத் திணைக்களம்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்தபெண்<br>தொ.இ: **B/11985** | பிறப்பு:1987இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:11செவ்6 சூரி5 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:**B.Sc, Laboralary Technician in Canada**<br>எதிர்பார்ப்பு: தகுந்தவரன், கனடா, அமெரிக்கா<br>தொ.இ:**G/5765** |
| பிறப்பு:1990 இந்து நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 38 செவ் 3சூரி5இல்<br>உயரம்:**175cm**<br>தகைமை/தொழில்: அரசமருந்தகலவையாளர்<br>எதிர்பார்ப்பு:அரச, தகுந்த தனியார்<br>தொ.இ: **B/11987** | பிறப்பு: 1966 இந்து நட்சத்திரம்:மூலம்<br>கி.பா:49 செவ் 1 சூரி3இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்: **A/L**<br>எதிர்பார்ப்பு:மணமகள் விவாகரத்தானவர், உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ:**G/5780** |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ[illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அற[illegible]


# மீண்டும் சிறைக்கு சென்றார் ரஞ்சன்

(கொழும்பு)

தங்காலை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்துவரப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மீண்டும் அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பாதுகாப்புக்கு மத்தியில் வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்ட ரஞ்சன் எம்.பி. வைத்தியசாலையின் உடற்பயிற்சி பிரிவில் ஏறக்குறைய ஒரு மணி நேரம் சிகிச்சை பெற்றுக் கொண்ட பின்னர் மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (நி-5)

# கொத்தலாவல சட்டமூலத்திற்கு எதிராக உடன்படிக்கை கைச்சாத்து

## 41 தொழிற்சங்கங்கள் பங்கேற்பு

(கொழும்பு)

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்திற்கு எதிராக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

41 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

அதன்படி, ஆசிரியர், அதிபர் சங்கங்கள், முன்னிலை சோஷலிச கட்சி, அனைத்து பல்லைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட 41 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளே இவ்வாறு கையெழுத்திட்டுள்ளனர். (நி-5)

# ஒரு நாளில் மட்டும் 4 லட்சம் பேருக்கு தடுப்பூசி

(கொழும்பு)

நாளொன்றில் அதிக எண்ணிக்கையிலான கொவிட் தடுப்பூசிகள் நேற்று முன்தினம் செலுத்தப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் 4 இலட்சத்து 12 ஆயிரத்து 111 கொவிட் தடுப்பூசிகள் நாடளாவிய ரீதியில் செலுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இதன்போது மூன்று இலட்சத்து 66 ஆயிரத்து 622 பேருக்கு இவ்வாறு சினோபார்ம் முதலாம் தடுப்பூசி செலுத்தப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முறைமைகளை மாற்றி பெரும்பான்மை கட்சிகளிடம் அதிகாரத்தை தக்கவைக்கவே புதிய அரசியலமைப்பு

## சிவசக்தி ஆனந்தன்



(வவுனியா)

**மாகாணசபை அதிகாரத்தை மலிதாக்கி பெரும்பான்மை கட்சிகள் அதிகா ரத்தை தக்க வைத்து கொள்வதற்கான தேர்தல் முறைகளை மாற்றித்தான் அரசியல் அமைப்பை கொண்டு வருவார்கள். இவ்வாறு இருக்கையில் புதிய அரசியல் அமைப்பை நம்பி எல்லா விடயங்களையும் கைவிட்டு ஏமாறுவதற்கு இடமளிக்கக் கூடாது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.**

ஊடக சந்திப்பொன்றில் புதிய அரசியலமைப்பு தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன? என்ற வினாவிற்கே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற சித்தாந்தத்தில் இருக்கின்ற இந்த அரசாங்கம் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அரசியல் அமைப்பை கொண்டு வரும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஏனெனில் ஆட்சிக்கு வரும் போதே இந்த நாட்டில் இனப் பிரச்சினை என்ற ஒன்று இல்லை எனக் கூறியவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் அமைப்பை கொண்டு வருவார்களா? என்பது சந்தேகமே எனத் தெரிவித்தார்.

மேலும் கொத்தலாவல பல்கலைக்கழகம் தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கொத்தலாவல பல்கலைக்கழகம் இதுவரை காலமும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நிர்வகிக்கப்பட்டது.

அப்படி இருக்கையில் திடீரென கொத்தலாவல பல்கலைக் கழகத்திற்கு ஒரு விசேட கூட்டம் இயற்றுவது இலவச பல்கலைக் கழக கல்வியை இராணுவமயமாக்குகின்றது என்பதோடு இதையொரு இராணுவ பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறதா? என்ற சந்தேகத்தையும்' ஏற்படுத்துகிறது.

மேலும் கொத்தலாவல பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற பலர் இந்த அரசாங்கத்தில் உயர் பதவிகளில் இருக்கிறார்கள். அத்தோடு இப்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று உயர் கல்விக்காக சீனாவிற்குச் சென்று திரும்பியுள்ள மாணவர்கள் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இதனூடாகவே சீனாவிற்கும் கொத்தலாவல பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான பாதுகாப்பு விடயங்கள் மேலும் வலுப்பெறுகின்ற ஆபத்தும் இருக்கின்றது.

சிவில் நிர்வாகத்துக்குள்ளே எதிர்காலத்தில் இராணுவத்தை உட்புகுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கையாகவும் இதைக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (7-4-299-350)

# பத்து லட்சம் பெறுமதியான மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது

## ஐவர் தப்பியோட்டம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவில் இருந்து சட்டவிரோதமாக கடத்தப்படவிருந்த முதிரை மரக் குற்றிகளுடன் ஒருவரை புதுக் குடியிருப்பு பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று அதிகாலை முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட றெட்பானா பகுதியில் இருந்து கடத்தப்படவிருந்த சுமார் பத்து இலட்சம் பெறுமதியான முதிரை மரக்குற்றிகளுடன் ஒருவரை பொலிஸார் கைது செய்ததுடன் 5 பேர் தப்பிச் ஓடியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட் முதிரை மரக் குற்றிகள் மீட்கப்பட்டதுடன் தப்பி ஓடிய ஏனையவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (7-4-281)

# முழங்காவில் வைத்தியசாலை வரை பேருந்து சேவை நடைபெற வேண்டும்

## பிரதேச சபை உறுப்பினர் வலியுறுத்து

(அக்கராயன்)

கிளிநொச்சி நகரிலிருந்து முழங்காவில் ஆதார வைத்தியசாலை வரை கிளிநொச்சி உள்ளூர் பேருந்து சேவைகள் நடைபெற வேண்டும் என பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கிளிநொச்சி நகரில் இருந்து அக்கராயன், வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, முழங்காவில் வரை உள்ளூர் பேருந்து சேவைகள் நடைபெறுகின்றன. இவ் உள்ளூர் பேருந்து சேவைகள் முழங்காவில் ஆதார வைத்தியசாலை வரை நடைபெற வேண்டும்.

மேலும் ஏ-32 சாலையில் முழங்காவில் மகா வித்தியாலய சந்தியில் இருந்து முழங்காவில் ஆதார வைத்தியசாலை வரை நோயாளர்கள் முழங்காவில் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து குறித்த 800 மீற்றர் தூரத்தினை நடந்து செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

முழங்காவில் மகா வித்தியாலய சந்தியில் இருந்து முழங்காவில் ஆதார வைத்தியசாலை வரை உள்ளூர் பேருந்து சேவைகள் நடைபெறுமானால் பாடசாலை மாணவர்களும் நோயாளர்களும் நன்மையடைவார்கள்.

இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பேருந்து சங்கங்கள் கவனத்திற் கொள்ள வேண்டும் எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (7-4-350)

# யாழ்.-வவு. புதிய புகையிரத சேவை இன்று முதல் ஆரம்பம்

(மல்லாவி)

இலங்கை புகையிரதத்திணைக்களத்தினால் வடக்கு மாகாண மக்களின் நலன் கருதி புதிதாக புகையிரத சேவை இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிப்பதாக இலங்கை புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த சேவையின் ஊடாக யாழ்.மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு கடமையாற்றச் செல்லும் அரச மற்றும் தனியார் துறைகளின் ஊழியர்கள் உட்பட தமது அவசியமான தேவைகள் நிமித்தமாக பயணிக்கும் பொதுமக்களும் இந்த புகையிரதத்தில் பயணிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளது.

இப்புகையிரத சேவையானது தினசரி யாழ்ப்பாணம் காங்கேசந்துறையிலிருந்து அதிகாலை 5.15 மணிக்கு புறப்பட்டு காலை 8.00 மணியளவில் வவுனியா புகையிரத நிலையத்துடன் தனது சேவையை நிறுத்திக் கொள்ளவுள்ளது.

மீண்டும் வவுனியா புகையிரத நிலையத்தில் இருந்து மாலை 5.00 மணிக்கு புறப்பட்டு காங்கேசன்துறையை இரவு 8.00 மணிக்கு வந்தடையவுள்ளது.

இப் புகையிரத சேவையின் போது யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்குமிடையில் உள்ள அனைத்து புகையிரத நிலையங்களிலும் தரித்து நின்று தனது பயணத்தை தொடரும் எனவும் புகையிரத திணைக் களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (7-4-15)

# விசாரணை

(முல்லைத்தீவு)

கறுப்பு ஜூலை 25 தொடக்கம் 27 ஆம் திகதி வரை நினைவு கூரப்பட்டு வரும் நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதில் பல சுவரொட்டிகள் கிழித்து எறியப்பட்டுள்ளதுடன், இது தொடர்பிலான கண்காணிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (4-6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

26.07.2021
ஆடி 10, திங்கட்கிழமை
துதியை காலை 6.19 மணிவரை
திருதியை பின்னிரவு 5.44 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 1.20 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சந்திராஷ்டமம்- புனர்பூசம், பூசம்

வளவன்

**மேஷம்** — பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**ரிஷபம்** — சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், செய்தொழில் மேன்மையுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

**மிதுனம்** — இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** — ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** — உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், களஸ்திர வழியில் சந்தோசமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** — முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** — கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிள்ளைகள் மீதான பாசம் கூடும்.

**விருச்சிகம்** — நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** — நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**மகரம்** — பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ்கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்** — கற்பனை மிகுதியான நாள், தொழிலில் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மீனம்** — மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், ஆதாயமில்லாத அலைச்சல்கள் அதிகரிக்கலாம், ஆனந்த வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள்.

உன்னையே நீ உணர தனிமை மிக மிக அவசியம்

# கிளாலி பகுதியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

## பொது அமைப்புகள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிளாலி பகுதியில் தொடர்ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதாக பிரதேச பொது அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு களினால் கடல் நீர் உட்புகும் அபாயநிலை காணப்படுகின்றது எனப் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வுகளை இராணுவத்தினரின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதும் குறித்த பிரதேசத்தில் தற்போதும் சட்டவிரோத மணல் அகழ்வில் இடம்பெறுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர். (7-4-315)

# கௌதாரிமுனை வீதி புனரமைப்பிற்கு ஆயிரத்து 300 மில்.ரூபாய் நிதி தேவை

## வீதி அபிவிருத்தி திணைக்களம் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி கௌதாரிமுனை வீதியினைப் புனரமைப்பதற்கு ஆயிரத்து 300 மில்லியன் ரூபாய் நிதி தேவை என வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரமன்கிராய் கௌதாரிமுனை மண்ணித்தலை, கல்முனை போன்ற பகுதிகளுக்கான பிரதான வீதியாகக் காணப்படுகின்ற பூநகரி கௌதாரிமுனை வீதி இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ் வீதியை தரைமட்டத்திலிருந்து குறிப்பிட்ட அளவு உயரத்துக்கு உயர்த்தி புனரமைக்க வேண்டியுள்ளது. இந்த வீதியைப் புனரமைப்பதற்கு சுமார் 1300 மில்லியன் ரூபா நிதி தேவை என்றும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமது திணைக்களத்திற்கு சொந்தமான மிக நீண்ட வீதிகளாகக் காணப்படுகின்ற 16 கிலோ மீற்றர் நீளமான பேய்ப்பாறை பிட்டி கல்லாறு வீதி, 13 கிலோ மீற்றர் நீளமான கௌதாரிமுனை பூநகரி வீதி என்பன இவ்வாறு தமது திணைக்களத்துக்கு உட்பட்ட மிக நீண்ட விதிகள் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதாகவும் மேற்படி திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4-315)

# தனியார் காணிகளாக காணப்படுவதால் வழங்குவதில் இடர்பாடுகள் உண்டு

## பூநகரி பிரதேச செயலாளர்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட சின்ன பல்லவராயன்கட்டு பிரதேசத்தில் விவசாயிகள் கோருகின்ற காணிகள் தனியார் காணிகளாக காணப்படுவதனால் அவற்றை அவர்களுக்கு வழங்குவதில் பல்வேறு இடர்பாடுகள் காணப்படுவதாக பூநகரிப் பிரதேச செயலாளர் எஸ்.கிருஷ்னேந்திரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்கு உட்பட்ட சின்ன பல்லவராயன்கட்டு கிராமத்தில் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக தாங்கள் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வரும் வயல் காணிகளை தங்களுக்கு பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையை பல்லவராயன்கட்டு விவசாயிகள் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றனர்.

குறித்த காணி தொடர்பில் பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்னேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

காணி நடமாடும் சேவைகளை நடத்தி அதன் மூலம் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடந்த 2014 ஆம் ஆண்டிலிருந்து இந்தக் காணிகளுக்கான முன்மொழிவுகள் வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் ஒரு காணி நடமாடும் சேவை ஒன்றினை நடத்துவதற்கான அனுமதி கிடைத்து அது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாவது காணி நடமாடும் சேவை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தனியார் காணி என்ற அடிப்படையில் அதனை அந்த மக்களுக்கு வழங்குவதில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதாவது சில காணி உரிமையாளர்கள் காணி உரிமம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-4-315)

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழான பன்னங்கண்டி, சின்ன காடு, முரசுமோட்டை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கைகளை இரவு வேளைகளில் கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக வயல் நிலங்களுக்கு அண்மித்த பகுதிகளில் கால்நடைகளை கட்டி பராமரித்தல் அல்லது பட்டிகளை வைத்திருக்க முடியாது என்ற தீர்மானங்கள் கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி கூட்டத்தின் போது தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்ற போதும் அவை நடைமுறைப்படுத்தவில்லையென விவசாயிகள் தெரிவித்தனர்.

எனவே கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-4-315)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# இந்தியாவை தாக்க திட்டமிடும் பாகிஸ்தான்

(டில்லி)

**இந்திய எல்லைக்குள் ட்ரோன் ஊடாக தாக்குதல் நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டமைக்கு இந்தியா கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது.**



இந்தியா- பாகி ஸ்தான் ஆகிய இருநாடு களும் எல் லைப்பகுதியில் சண் டை நிறுத்த உடன் படிக்கையை மேற்கொண்டுள்ளது. இத னால் அண்மைக்காலமாக எல்லைப் பகுதிகளில் அமை தியான சூழ்நிலை காணப் பட்டு வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் எல்லைப் பாது காப்புப் படையினர் மற்றும் பாகிஸ்தான் ரேஞ்சர்ஸ் படையினர் ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதில் இரு நாடுகளின தும் இராணுவ உயர் அதி காரிகளும் கலந்துகொண்டு கலந்துரையாடலில் ஈடுபட்டி ருந்தனர்.

இதன்போதே ட்ரோன் விமானத் தாக்கு தல் தொடர்பாக இந்தியா கடும் கண்ட னத்தை வெளி யிட்டுள்ளது.

இந்த ட்ரோன் விமானத் தாக்குதல் பெரும் சர்ச் சையை ஏற்படுத்தியுள்ள போதிலும், இருநாட்டு இரா ணுத்தினரும் எல்லையில் தொடர்ந்து அமைதியைக் கடைப்பிடிக்க உறுதி பூண்டு ள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின் றன. (8-7)




ஒடிசாவில் பூரி நகரை சேர் ந்த சிறுமி நந்தினி பட்னாயக் (வயது -14). இவர் ஏறக் குறைய 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ஐஸ்கிரீம் குச்சிகளைக் கொண்டு மினி டோக்கியோ ஒலிம்பிக் மைதானம் ஒன்றை உருவாக்கி உள்ளார்.

ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டுள்ள இந்திய விளையாட்டு வீரர், வீரா ங்கனைகளுக்கு அர்ப்பணி க்கும் நோக்கில் இதனை அவர் தயாரித்து உள்ளார்.

## ஓநாயிடம் சிக்கிய சிறுமியை காப்பாற்றிய செல்லப்பிராணி



(டொரண்டோ)

கனடாவில் 10 வயது சிறுமியை ஓநாயிடம் இரு ந்து அவரது செல்லப் பிராணி நாய் போராடி காப்பாற்றி யுள்ளது.

டொரண்டோ பகுதியைச் சேர்ந்த 10 வயது சிறுமி தனது நாயுடன் வெளியில் சென்ற போது திடீரென வந்த ஓநாய் ஒன்று சிறு மியை துரத்தத் தொட ங்கியது. இதனால் பயந்து போன அந்த சிறுமி அதிர்ச்சி அடைந்து அங்கிருந்து ஓடி னார். ஆனால் அவரது நாய், ஓநாயை எதிர்த்து போராடியது. ஓநாய் கடித்த தில் நாய்க்கு காயம் ஏற்ப ட்டுள்ளதால் சிகிச்சைஅளிக் கப்பட்டு வருகின்றது. (8-5)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-4 174 769**

**தொற்று :-194 733 260**

**(நேற்றைய நிலைவரம்)**

## கட்டாய தடுப்பூசி திட்டத்தை எதிர்த்து கிரேக்கத்தில் போராட்டம்

(ஏதென்ஸ்)

கட்டாய தடுப்பூசி திட்ட த்திற்கு எதிப்பு தெரிவித்து சனிக்கிழமை மத்திய ஏதெ ன்ஸில் கூடியிருந்த மக் களை கலைக்க கிரேக்க பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தை மேற் கொண்டுள்ளனர்.

இந்த மாதத்தில் மூன்றா வது முறையாக கிரேக்க பாராளுமன்றத்திற்கு வெளியே 4,000 இற்கும் மேற்பட்ட மக்கள் போரா



ட்டத்தில் ஈடுபட்டனர்.

சில எதிர்ப்பாளர்கள் பெற்றோல் குண்டுகளை வீசியதாகவும் இதற்கு பதிலளிக்கும் வகையில் தண்ணீர்ப்புகை வீசியதாக வும் பொலிஸார் கூறியு ள்ளனர்.

கடந்த ஆண்டு தொற்று பரவ தொடங்கியதில் இரு ந்து கிரேக்கத்தில் 12,890 பேர் உயிரிழந்துள்ள நிலை யில் 11 மில்லியன் மக்கள் தொகையில் சுமார் 45% பேருக்கு தடுப்பூசி செலு த்தப்பட்டுள்ளது.

நோயாளிகள் அதிகரி த்துள்ளதால் சுகாதார ஊழி யர்கள் மற்றும் ஆசிரியர் கள் தடுப்பூசி செலுத்த வேண் டும் என கிரேக்க அரசாங் கம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-7)

## வியாழன் கே

(வோஷிங்டன்)

வியாழன் கோளின் 80 நிலவுகளில் ஒன்றான யூரேப்பா வில் ஆய்வு மேற்கொள்வதற் காக, அமெரிக்காவின் விண் வெளி ஆய்வு அமைப்பான நாசா அந்த நாட்டின் தனியார் நிறுவனமான ஸ்பேஸ்- எக்ஸ்டன் ஒப்பந்தம் மேற் கொண்டுள்ளது.

உயிரினங்கள் வசிப்பதற்கு யூரேப்பா ஏற்றதா? என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அந்த நிலவுக்கு ஆய்வுக் கலனை எதிர்வரும் 2024 செலுத்துவ தற்கான இந்தத் திட்டத்தில், ஸ்பேஸ்-எக்ஸின் ஃபால்கன் கனரக ரொக்கெட் பயன்படுத் தப்படவுள்ளது.

23 அடுக்குகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

# அமெரிக்காவில் பரவி வரும் புதிய வகை பூஞ்சை தொற்று

## அச்சத்தில் அமெரிக்க மக்கள்

**(வோஷிங்டன்)**

**அமெரிக்காவில் புதிதாக கேண்டிடா ஆரிஸ் என்ற ஒரு வகை பூஞ்சை நோய் பரவி வருகிறது. இந்நோய்க்கு சிகிச்சையளிக்க இயலவில்லை என்று அமெரிக்க சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.**



இந்த பூஞ்சை தொற்று இரத்த ஓட்டத்தை பாதித்து மரணத்தை ஏற்படுத்தும் அளவுக்கு ஆபத்தானது.

அமெரிக்க சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ள தகவலின் படி இதுவரை வோஷிங்டனில் 101 பேருக்கு கேண்டிடா ஆரிஸ் தொற்று உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

காய்ச்சல் மற்றும் குளிர் ஆகியவை கேண்டிடா ஆரிஸ் நோய்த்தொற்றின் பொதுவான அறிகுறிகளாகும். நோய் பாதித்தவர்களுக்கு ஆன்டிபயோடிக் சிகிச்சை அளித்தபோதும் உடல் நிலை சீரடையவில்லை என அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் தெரிவித்துள்ளன.

கொரோனாப் பாதிப்பில் இருந்து மீண்டு வரும் நிலையில், இந்த புதிய தொற்று மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. (8-5)

# புற்றுநோய் மருந்துக்குத் தட்டுப்பாடு

# மெக்சிக்கோவில் போராட்டம்





(மெக்சிக்கோசிற்றி)

மெக்சிக்கோவில் அரசு பொது மருத்துவமனைகளில் ஏற்பட்டுள்ள குழந்தைகளுக்கான புற்றுநோய் மருந்து தட்டுப்பாட்டை எதிர்த்து ஏராளமான பெற்றோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மெக்சிகோவில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 2 ஆயிரத்து 300 குழந்தைகள் புற்றுநோயின் கோரப் பிடியில் சிக்கி உயிர் இழப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் தற்போது மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பெற்றோர் பேரணியாக வந்து எதிர்ப்பை பதிவு செய்தனர். (8-5)

# கோளின் நிலவில் ஆய்வு



கொண்ட, ஓரளவு மீண்டும் பயன்படுத்தத்தக்க ஃபால்கன்தான் உலகில் தற்போது செயற்பாட்டில் இருக்கும் அதிக சக்தி வாய்ந்த ரொக்கெட் என்று கூறப்படுகிறது. (8-7)

# ஆப்கான் பாதுகாப்பு படையினர்

## தலிபான்களுக்கு எதிராக அதிரடி தாக்குதல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சகம் நேற்று முன்தினம் சனிக்கிழமை தங்கள் பாதுகாப்புப் படையினர் பல்வேறு மாகாணங்களில் நேற்று முன்தினம் மட்டும் 262 தலிபான் பயங்கரவாதிகளை கொன்றதாகக் கூறியுள்ளது.

ஆப்கானிய படைகளின் விசேட நடவடிக்கைகளின் போது 176 தலிபான் பயங்கரவாதிகள் காயமடைந்துள்ளதாகவும் 21 வெடிக்கும் சாதனங்கள் செயலிழக்கம் செய்யப்பட்டதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.



அமெரிக்கப் படையினர் வெளியேறி வருகின்ற நிலையில் தலிபான்கள் நகரங்களை ஆக்கிரமிப்பதைத் தடுக்கும் முயற்சியில், ஆப்கானிஸ்தான் அரசாங்கம் கிட்டத்தட்ட நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவை விதித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (8-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவால் இரு வாரங்களில் 611 பேர் உயிரிழப்பு

## சுகாதாரத் தரப்பு தகவல்

(கொழும்பு)

**நாட்டில் கடந்த இரு வாரங்களில் 611 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன என சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.**

நாட்டில் டெல்டா தொற்று பரவல் அதிகமாகக் காணப்படலாம். எனவே போக்குவரத்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருந்தாலும் முகக் கவசம் அணிதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார விதிமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றுமாறும் குறிப்பாக சகலரையும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் சுகாதாரத் தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

டெல்டா தொற்றுக்கு உள்ளானவர்கள் இனங்காணப்பட்ட பிரதேசங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள பல மாதிரிகள் சந்தேகத்திற்கிடமான வையாகக் காணப்படுவதால் சமூகத்தில் மேலும் டெல்டா தொற்றாளர்கள் காணப்படக் கூடும் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் பட்டுவந்துடாவ தெரிவித்தார்.

சமூகத்தில் அதிக தொற்றாளர்கள் இனங்காணப்படக் கூடும் என்று சந்தேகிப்பதால் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகம் தவிர்ந்த கொழும்பு இரசாயன ஆய்வுகூடம், கண்டி, கராப்பிட்டிய, அநுராதபுரம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பொது வைத்தியசாலைகளிலும் டெல்டா தொற்றைக் கண்டறிவதற்கான ஏற்பாடுகளை சுகாதார அமைச்சு முன்னெடுத்துள்ளதாகவும் வைத்தியர் பட்டுவந்துடாவ தெரிவித்தார்.

கடந்த இரு வாரங்களில் 611 கோவிட் மரணங்கள் இலங்கையில் பதிவாகியுள்ளன. இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 353 ஆண்களும், 258 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்களில் 5 பேர் 30 வயதுக்குக் குறைவானோராவர். இதேபோன்று 147 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பதோடு, 459 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர்.

இலங்கையில் முதலாவது கொவிட் பரவல் அலையில் 13 மரணங்களும், இரண்டாவது அலையில் 596 மரணங்களும், தற்போதைய மூன்றாவது அலையில் 3393 மரணங்களும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## இலங்கைக்கு எதிராக போராட சுவிஸில் புதிய அமைப்பு?

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக எதிர்காலத்தில் போராட சுவிட்சர்லாந்தில் பிறந்த இளைஞர்கள் ஒன்றிணைந்து நிதர்சன் என்ற அமைப்பை உருவாக்கியுள்ளதாக தென்னிலங்கை ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

பெசல் நகரை மையமாகக் கொண்ட இந்த அமைப்பு, "தமிழீழ இளைஞர்" என்ற பெயரில் அடையாள அட்டையை வெளியிடுவதாகவும் அறிவித்துள்ளது.

சுவிட்சர்லாந்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்படவில்லை என்பதால், தமிழ் இளைஞர்களை இந்த அமைப்பில் இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய அமைப்பு விடுதலைப் புலிகளின் புதிய தலைமுறை என ஜெனிவாவில் உள்ள தமிழர் தரப்புத் தகவல்கள் கூறுவதாகவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

## வாகன இலக்கத் தகடுகள் தபால் மூலம் விநியோகம்

(கொழும்பு)

தபால் திணைக்களத்தின் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டத்தை செயற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதன் முதல் கட்டமாக, வாகன இலக்கத் தகடுகளை தபால்மூலம் விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-5)

## சேதனப் பசளை பயன்பாடு அடுத்த மாதம் முதல் அறிமுகம்

(கொழும்பு)

பெரும்போகத்தின் போது சேதனப் பசளைப் பயன்படுத்தும் முறைமை தொடர்பில் அடுத்த மாதம் முதல்வாரத்தில் அறிமுகப்படுத்தவுள்ளதாக விவசாயத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த அமைச்சின் புதிய செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் உதித் கே.ஜயசிங்க இதனை தெரிவித்தார்.

பயிர்ச் செய்கைகளுக்கு தற்போது பொட்டாசியம் மற்றும் நைதரசன் பசளைகள் தேவையாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் தேவைக்கு ஏற்ப அவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2362

திஷா

கத்தி எடுத்தவனுக்கு கத்தியில சாவு...
துப்பாக்கி எடுத்தவனுக்கு துப்பாக்கில
சாவுன்னு சொல்லுவாங்க...



அப்படின்னா... நமக்கெல்லாம்
செல் போனில தான் சாவா ?

தினேஸ்



இன்று உன் தோற்றத்தைக் கண்டு
வெறுத்தவர்கள்...



நாளை உன் மாற்றத்தைக் கண்டு
வியப்பார்கள்...!

தர்சிகா

வயிறு வலிக்குதுன்னு பொய் சொல்லி
ஸ்கூலுக்கு லீவு போட்டுட்டு




மதியம் ஒரு கட்டு கட்டும் போது

சுசிலா

என்ன மேடம் Messenger இலே அவ்வளவு
நேரம் Chat பண்ணுறீங்க நேரிலே பார்த்தா
பாக்காத மாதிரி போறீங்க...



மல்லிகா

திடீர்னு PET சார் classuku வந்து
பெஞ்ச் தூக்க ஆள் வேனும்னு சொல்லுவாங்க




நிருஷன்



என்ன தான் Alarm வச்சிட்டு தூங்கினாலும்...



Alarm அடிக்கும் போது,அதை off பண்ணிட்டு...



தூங்குற சுகமே வேறயா.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்தலாவல சட்டமூலம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு செயலமர்வு



(கொழும்பு)

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலம் குறித்து பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு விசேட செயலமர்வு ஒன்றினை நடத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

குறித்த செயலமர்வு பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயலமர்வில் ஆளும் மற்றும் எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளதாக பாராளு மன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலம் குறித்து பல்வேறு தரப்பினரும் வெவ்வேறுப் பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமையினால், அந்த சட்டமூலம் தொடர்பில் தெளிவுபடுத் தலினை ஏற்படுத்துவதற்காகவே செயலமர்வு நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (நி-5)

# விவசாய பல்கலைக்கழகம் நிறுவ சீனா ஆதரவு

(கொழும்பு)

இலங்கையில் அதிநவீன விவசாய மற்றும் ஹைடெக் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு சீனா ஒப்புக் கொண்டுள்ளதாக சீனாவுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் டாக்டர் பாலித கோஹண, சீனாவின் ஹூபே மாகாணத்தில் உள்ள வுஹான் பல்கலைக்கழகத்துக்கு கடந்த 19 ஆம் திகதி விஜயம் செய்தபோது இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டது.

வுஹான் பல்கலைக் கழகம் மற்றும் சீனப் பெருஞ்சுவர் தொழிற்றுறை கழகத்தின் துணைத் தலைவரின் அழைப்பின் பேரில் கலாநிதி பாலித கோஹண, வுஹான் பல்கலைகழகத்தைப் பார்வையிட்டார்.

அங்கு துணைத் தலைவர் யாகின் சுய் தலைமையிலான பல்கலைக்கழகங்களுக்கிடையேயான பல்கலைக்கழகங்களின் குழு, அதிநவீன விவசாய மற்றும் ஹைடெக் பல்கலைக்கழகத்தை நிறுவ ஆதரவு தருவதாக அறிவித்துள்ளது.

ஹூபே மாகாண ஆளுநர் ஷோங்ளின் வாங்குடன் இடம்பெற்ற முறையான சந்திப்பின் போது அவரால் ஒப்புதல் வழங்கப்பட்டதாக தூதரகம்மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

# சிறுமியைக் கொடுமைப்படுத்திய தந்தை, மாமி கைது

(கொழும்பு)

நுரைச்சோலைப் பகுதியில் வீடொன்றில் சித்திரவதைக்கு ஆளாகியிருந்த 13 வயதான சிறுமி ஒருவர் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய சிறுமியை சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் அச்சிறுமியின் தந்தை மற்றும் மாமி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் ஓகஸ்ட் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தண்டனைச் சட்டக் கோவையின் 308 (ஆ) பிரிவுக்கமைய சிறுவர்களை வன்கொடுமைக்கு உட்படுத்துவது குற்றமாகும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-5)

# சட்டவிரோதமாக தங்கியிருந்த 38 இலங்கையர்கள் கைது

(சென்னை)

இந்தியாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 38 இலங்கையர்கள் குறித்து இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தமிழக பொலிஸாருடன், பெங்களூர் பொலிஸார் இணைந்து சுமார் ஒரு மாதமாக நடத்திய தேடலில் 38 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர்கள் இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக கனடாவுக்கு குடிபெயர தயாராகி வருவதாக கூறப்படுகிறது.

இதற்காக நபர் ஒருவருக்கு, இலங்கை மதிப்பில் 10 இலட்சம் ரூபாய் வீதம் கொடுத்து கனடா செல்ல முயன்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூர் நகர பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் மேலதிக விசாரணைக்காக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். மேலும், இந்த வழக்கு இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த குழு கடந்த மார்ச் மாதம் இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தது முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தாய்ப்பால்

ஒரு வாட்ட சாட்டமான ஆள். தலையிலே ஒரு மூடையுடன் நடந்து வந்து கொண்டிருந்தார். அந்த வழியாக ஒரு மாட்டு வண்டி வந்தது.

மாட்டு வண்டிக்காரன் இந்த ஆளைப் பார்த்தான். ஏன் கஷ்டப்படுகின்றாய்? வண்டி சும்மா தானே போகின்றது. உட்கார்ந்து கொள்! என்றான்.

இவன் ஏறி உட்கார்ந்தான். வண்டி போய்க் கொண்டிருந்தது. கொஞ்சத் தூரம் போனதும் வண்டி ஓட்டுகிறவன் திருப்பிப் பார்க்கின்றான்.

இவன் அந்த மூடையைத் தலையிலே வைத்துக் கொண்டு உட்கார்ந்து இருந்தான்.

"எதற்கு இன்னமும் அந்த மூடையைத் தலையிலே வைத்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

"எதற்கு வண்டிக்குப் பாரம்... அது என்னை மட்டும் சுமந்தா போதும்... மூடையை நான் சுமந்துக்கிறேன்!" என்றான்.

இதற்கு என்ன அர்த்தம்?

அந்த ஆளுக்கு உடம்பு தான் வளர்ந்திருக்கே தவிர மூளை வளரவில்லை என்று அர்த்தம்!

இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

ஒரு மனிதனுக்கு மூளை வளர்ச்சி என்கிறது எப்போது ஆரம்பிக்கும்... எப்போது முடியும் என்று தெரியுமா?

ஒரு குழந்தைக்கு அது பிறந்த பிறகு தான் பெரும்பாலும் அதன் மூளை வளர்ச்சியே ஆரம்பமாகுதாம்!

அதனாலேயே பிறந்த குழந்தைகளுக்கு மூளை வளர்ச்சிக்குத் தேவையான உணவு தான் அதிமாகத் தேவை. முதல் ஐந்தாறு மாதங்கள் தான் முக்கியமான மூளை வளர்ச்சிப் பருவம்.

அதனாலேயே அந்த சமயத்தில் நாம் கொடுக்கிற ஆகாரத்தைப் பொறுத்துத் தான் குழந்தையினுடைய மூளை வளர்ச்சியடைய வேண்டும்.

வாழ்நாள் முழுவதும் அந்த மூளை தான் உபயோகப்படப் போகுது.

சரி... அப்படியென்றால் அந்தக் குழந்தைக்கு... மூளை வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய ஆகாரம் எது? அப்படியென்றால் அது தாய்ப்பால் தான்!

மூளை வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய உணவுக்கூறு வேறு எந்த ஒரு புற உணவைக் காட்டிலும் தாய்ப்பாலிலே மட்டும் தான் அதிகமாக இருக்கிறது.

மற்ற உணவுகளில் அது ரொம்பக் குறைவு. அது மட்டுமில்லாமல்... மற்றைய உணவுப்பொருட்களை செரிமானம் அடையச் செய்யக்கூடிய ஆற்றலும் பிறந்த குழந்தையிடம் கிடையாது!

மாடு எப்படித் தெரியுமா?

பிறக்கும் போது போதுமான மூளை வளர்ச்சியோடு பிறக்கிறது. அது மட்டுமல்ல... எல்லா விலங்குகளும் அப்படித்தான்.

அதனாலேயே அது பிறந்தவுடனே மூளை வளர்ச்சிக்கு என்று முக்கியமான உணவுக்கூறுகள் எதுவும் தேவையில்லை.

அந்தச் சிறப்பு அதன் தாயிடமிருந்து வரும் பாலிலும் கூட இல்லை. இயற்கையமைப்பே இதுதான்.

அதாவது கன்றுக்குட்டியின் மூளை வளர்ச்சிக்குக் கூட பயன்படாத அந்த மாட்டுப்பாலை... மூளை வளர்ச்சிக்கு என தாய்ப்பாலையே நம்பியிருக்கின்ற குழந்தைக்கு கொடுக்கிறது எவ்வளவு கொடுமை! குழந்தையை ஏமாத்திற மாதிரி அது!

இன்னொரு முக்கியமான விடயம் என்ன தெரியுமா?

ஒரு மனிதன் பிறக்கும் போது 3 கிலோ. ஒரு பதினைந்து வருடத்திற்கு பின்பு 60 கிலோ.

ஆனால் ஒரு கன்றுக்குட்டி பிறக்கிறபோது 40 கிலோ. 2 வருடத்திற்குள் 600 கிலோ எடையுள்ள முழு மாடா ஆகிவிடுகிறது. இன விருத்திக்கு தயாராகிறது.

அதனாலேயே மாட்டுப்பாலிலே மூளை வளர்ச்சிக்குத் தேவையான கூறுகள் இல்லையே தவிர உடல் வளர்ச்சிக்கு தேவையான எல்லாம் நிறைய இருக்கிறது.

அதனாலேயே மாட்டுப்பாலை பிறந்த குழந்தைக்குக் கொடுக்கும் போது மூளை வளர்ச்சிக்குப் பதிலாக மற்ற வளர்ச்சிகள் தான் அதிகமாக ஆகிவிடுகிறது.

தாய்ப்பால் முழுவதையும் புறக்கணித்தாலும் இப்படி ஆகும்.

கொஞ்சம் கொஞ்சம் மாட்டுப்பாலைக் கொடுத்தாலும் இப்படி ஆகுது என்கின்றது புள்ளி விபரம். இன்றைக்கு மனிதர்களிலே பலபேர் அறிவைப் பயன்படுத்திறதில்லை!

உணர்வைத்தான் அதிகமாகப் பயன்படுத்திறார்கள்.

இதற்குக் காரணம் பிறந்த ஐந்தாறு மாதங்களுக்குத் தாய்ப்பால் கிடைக்காமல் போனதுதான்!

இது ஒரு முக்கியமான அறிவியல் உண்மை.

இதை எல்லோரும் கொஞ்சம் மனதிலே வைக்க வேண்டும்.

ஒருத்தர் ரொம்பப் பெருமையாக சொன்னார்...

"நான் சின்னப்பையனா இருந்தபோது எங்கள் அப்பா என்னை 'கன்னுக்குட்டி' என்றுதான் கூப்பிடுவார்!" என்றார்

"இப்போது எப்படி கூப்பிடுகிறார்?" என்றேன்.

"எருமைமாடு என்று கூப்பிடுகிறார்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

36

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**மாகாணசபை நிரலில் மாகாண சபைகளுக்கான 37 விடயங்கள் இடம்பெறுகின்றதோடு 18 ஆவது விடயமாக் காணப்படுவது காணி. அதில் "காணியும் காணிக் குடியேற்றமும்" என்ற தலைப்பில் அரச காணி பராதீனப்படுத்தல், பகிர்தல், நிர்வகித்தல், கட்டுப்படுத்தல், பயன்படுத்தல் என்பன பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. எனவே இது மாகாண சபையானது அப்பிரதேசத்தினுள் காணி நிர்வாகம் செய்ய முடியும் என்பதைக் காட்டுகின்றது.**

9 ஆம் அட்டவணை 2 ஆவது நிரல் அல்லது ஒதுக்கிய நிரலில் மத்திய அரசாங்கத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள 16 விடயங்கள் இடம்பெறுகின்றன. இதில் 10 ஆவது விடயமாக் காணப்படுவது காணி வளங்கள் மற்றும் சுரங்க நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டது. எனவே ஓர் அரச காணியில் அதன் வளங்கள் சம்பந்தமான நடவடிக்கைகள் மத்திய அரசு மட்டுமே எடுக்க முடியும் போல இருக்கிறது.

**9 ஆம் அட்டவணை ஒதுக்கிய நிரலில் மத்திய அரசாங்கத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள 16 விடயங்கள் இடம்பெறுகின்றன. இதில் 10 ஆவது விடயமாக் காணப்படுவது காணி வளங்கள் மற்றும் சுரங்க நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டது. எனவே ஓர் அரச காணியில் அதன் வளங்கள் சம்பந்தமான நடவடிக்கைகள் மத்திய அரசு மட்டுமே எடுக்க முடியும் போல இருக்கிறது.**

இதே நேரத்தில் 9 ஆம் அட்டவணையின் 3 ஆவது நிரலைப் பார்ப்போமானால் அது ஒருங்கிணை நிரலாகும். அதாவது மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளுக்கு பொதுவான நிரலாகும். அதில் மத்திய அரசாங்கமும் மாகாணசபைகளும் சமாந்தரமாக செய்யக் கூடிய 36 விடயங்கள் இடம்பெறுகின்றதோடு 6 ஆவது விடயமாக் காணப்படுவது சொத்துக்களை சுவீகரித்தலும், சொத்துக்களை பலவந்தமாகப் பெறுதலும் ஆகும். காணியும் ஒரு சொத்து ஆகையால் அரச காணிகளை சுவீகரித்தலும், காணிகளை பலவந்தமாகப் பெறுதலும் இதனுள் உள்ளடங்கும். எனவே மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் காணிகளை சுவீகரிக்கவும் காணிகளை பலவந்தமாகப் பெறவும் உரிமையுண்டு. ஆனால் ஒன்று மற்றையதின் இணக்கத்தைப் பெற்றே நடவடிக்கை எடுக்க முடியும்.

**ஒருங்கிணை நிரல் மத்திய அரசாங்கம் மற்றும் மாகாணசபைகளுக்கு பொதுவான நிரலாகும். அதில் மத்திய அரசாங்கமும் மாகாண சபைகளும் சமாந்தரமாக செய்யக் கூடிய 36 விடயங்கள் இடம்பெறுகின்றதோடு 6 ஆவது விடயமாக காணப்படுவது சொத்துக்களை சுவீகரித்தலும் சொத்துக்களை பலவந்தமாகப் பெறுதலும் ஆகும். காணியும் ஒரு சொத்து ஆகையால் மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் காணிகளை சுவீகரிக்கவும் காணிகளை பலவந்தமாகப் பெறவும் உரிமையுண்டு.**

இவ் இணைப்பு உரிமை பற்றி ஒரு முறை வடக்கு மாகாண முதல் அமைச்சராகவும் காணி அமைச்சராகவும் இருந்த நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இவ்விடத்தில் பதிவிடல் சாலப் பொருந்தும்என்று நினைக்கிறேன்.

"இங்கு தான் வடமாகாண சபைக்கு ஒரு பெரிய பிரச்சினை ஒன்று இருக்கின்றது. உண்மையிலே வடமாகாண சபைக்கு காணி சம்பந்தமாக இருக்கும் உரிமைகள் ஒரு இணைப்பு உரிமை. மத்திய அரசாங்கத்திற்கும் அந்த உரித்து இருக்கின்றது. எங்களுக்கும் இருக்கின்றது. சில விடயங்களிலே எங்களுக்கு இருக்கும் உரித்தை நாங்கள் பிரயோகிக்க முற்பட்டோமானால் இந்தக் காணிகளை இராணுவம் கையேற்கும் போது எம்மிடம் இருந்து அனுமதி பெற வேண்டும். இது சம்பந்தமாகத் தான் கிட்டத்தட்ட 30 விண்ணப்பங்கள் இராணுவத்தினால் எம்மிடம் கேட்கப்பட்ட போது நான் அதற்கு அனுமதி கொடுக்க மறுத்தேன்.

ஆனால் அதன் பின்னர் அதுபோன்ற விண்ணப்பங்கள் என்னிடம் வரவில்லை. எதற்காக என்று கேட்கப்போன போது அவர்கள் நேரடியாக **Registrar General of lands, Commissioner General of lands** அவரிடம் ஆணையாளரிடம் தங்களுடைய விண்ணப்பத்தை செய்து வருவதாக அறிகின்றேன். அது எந்தளவுக்கு சட்டபூர்வமானது என்பது பற்றி எனக்குத் தெரியாது. இவற்றிலே பல விடயங்கள் சட்டபூர்வமாக நாங்கள் அறிந்து கொள்ள வேண்டி இருக்கின்றது. அதனுடைய சட்டபூர்வ தன்மையை சட்டத்திற்கு புறம்பானதா? இல்லையா? என்பது பற்றி நாங்கள் அறிய வேண்டி இருக்கின்றது.

இப்பொழுது பல இடங்களிலே இராணுவம் இந்த காணி சுவீகரிப்பு சட்டத்தின்கீழ் இடங்களை தாம் கைவசப்படுத்துவதற்கு மனுச் செய்து கொண்டு இருக்கின்றார்கள். எங்களுடைய அலுவலகர்களிடம் இந்த மனுவிலே என்ன காரணத்திற்காக இதை கையேற்க வருகின்றார்கள் என்று பார்க்கும் போது தம்முடைய இராணுவ முகாங்களை அமைப்பதற்காக அல்லது இராணுவத் தேவைகளுக்கான ஏதோ ஒன்றை அமைப்பதற்காக இந்த விண்ணப்பங்களை செய்வதாக அறிகின்றோம். அந்த Land Acquisition Act இன் கீழ் இப்பேற்பட்ட ஒரு விண்ணப்பம் செய்வதானால் அது பொதுமக்களின் நன்மை கருதி பொதுமக்களின் நன்மைக்காக இருக்கும் ஒரு காரணத்தை ஒட்டியே அந்த விண்ணப்பத்தைச் செய்யலாம். ஆகவே இராணுவம் தமது இராணுவ முகாங்களை அமைப்பதற்காக இவ்வாறு கோருவதானால் அது என்ன அடிப்படை என்று நான் வவுனியாவில் நடந்த கூட்டத்தின் போது அரசாங்க அதிபரிடம் கேட்டேன். அப்பொழுது அவர் கூறினார், பாதுகாப்பு காரணங்களுக்காக கேட்பதால் அது மக்களினுடைய தேவை என்று. நான் கூறினேன், மக்கள் தங்களுக்கு பாதுகாப்பு தருமாறு கேட்கவில்லை. உண்மையிலே பாதுகாப்பு படைகள் எங்களை விட்டுப் போக வேண்டும் என்ற அடிப்படையில் தான் எங்களை இந்த வடமாகாண சபைக்கு அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். அவர்களை நாங்கள் வெளியேற்றுவோம் என்று கூறித்தான் நாங்கள் இந்த பதவியை ஏற்றிருக்கின்றோம். ஆகவே அவர்கள் எங்களுடைய பாதுகாப்புக்காக தங்களுக்கு முகாம்கள் அமைக்க வேண்டும் என்று கேட்பது மக்களினுடைய தேவையாக எனக்குப் படவில்லை. இதன் காரணத்தினால் பலர் என்னிடம் கேட்ட போது நான் சொன்னேன், நீங்கள் இது சம்பந்தமாக நீதிமன்றங்களை நாட வேண்டும். நீதிமன்றங்கள் இது சம்பந்தமான ஒரு கருத்தை வழங்க வேண்டும் என்று."

ஆகவே எங்களுக்கு தற்போது இருக்கும் இந்தப் பிரச்சினை காணி சம்பந்தமான பிரச்சினைகள் பல இருந்தாலும் அவற்றில் முக்கியமாக நாங்கள் மனதிற்கு எடுக்க வேண்டியது, இந்தக் காணிகள் யார் யாருடைய அதிகார மையத்தினுள் அடங்கும். அவற்றை மக்களுக்கு பிரித்துக் கொடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், அது சம்பந்தமாக நடவடிக்கைகள் முறையாக எடுக்கப்பட்டனவா? என்பது பற்றி எல்லாம் நாங்கள் சிந்திக்க வேண்டி இருக்கின்றது" என்று தெரிவித்தார்.

### 13 ஆவது திருத்த்தின்படி மத்திய அரசாங்கத்தின் காணி அதிகாரங்கள்

**1) அரச காணிகளை கையுதிர்த்தல் (Vesting of State Land) சம்பந்தமான அதிகாரங்கள்**

அரச காணி தொடர்ந்தும் குடியரசுக்கு உரித்தாதல் வேண்டுமென்பதுடன் அரசியல் அமைப்பின் உறுப்புரை 33(d) (இது 20 ஆவது திருத்தத்தில் 33(f) ஆகும்) என்பதற்கும், அவ்விடத்தை ஆளுகின்ற எழுத்திலான சட்டத்துக்கும் இணங்க கையாளவும் படலாம் என்று 13 ஆம் திருத்தத்தின் பின்னிணைப்பு–II இல் கூறப்பட்டுள்ளது. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் வீட்டு உரிமையாளர்கள் கைதாவர்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணையம் அறிவிப்பு

(கொழும்பு)

**வீடுகளில் சிறுவர்கள் பணியாற்றினால் வீட்டு உரிமையாளர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய சிறுவர் ஆணையம் தெரிவித்துள்ளது.**

கொழும்பில் பல பணக்காரர்கள் தங்கள் வீடுகளில் பணியாற்றுவதற்காக சிறுவர்களை ஈடுபடுத்துவதாக தகவல் வெளியாகியுள்ளதென அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் நாட்களில் அவ்வாறான வீடுகளை சோதனையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் பேராசிரியர் முதித்த விதான பத்திரன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாரிடம் கடிதம் மூலம் தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)



# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## சுக வாழ்வு அருளும் குருவாரம்



தயாள சிந்தனை உடையவர். குரு பகவானின் 5, 7ஆம் பார்வை சகல நன்மைகளையும் தருவதாகும். ஒருவரின் திருமண யோகத்திற்கு குரு பலம் மிகவும் அவசியம்.

தன்னை வழிபடுபவர்களுக்கு உயர்வான பதவி, மன மகிழ்ச்சி, புத்திரப்பேறு, செல்வம், சுகம் ஆகியவற்றையும் கொடுப்பவர். ஒருவரது ஜாதகத்தில் குரு பகவானின் அருள் பூரணமாக இருந்தால், அவருக்கு அமைச்சராகும் வாய்ப்பு கிடைக்கும். கடல் கடந்து சென்று செல்வம் தேடி செல்வந்தர் ஆகும் சூழ்நிலையும் ஏற்படும்.

வியாழ பகவான் நான்கு திருக்கரங்களுடன் காட்சி தருவார். கமண்டலம், அட்சமாலை, யோக தண்டத்தை தாங்கி, அபய முத்திரையுடன் அருள்புரிவார். இவருக்கு பிடித்த உலோகம் தங்கம். ஜாதக ரீதியான பல்வேறு தோஷ அமைப்புகளை ஏற்படுத்தும் கிரகங்கள், இராசிகள், கிரகக்கூட்டணிகள், அசுப ஸ்தானங்கள் ஆகியவற்றை தமது பார்வை பலத்தால் நன்மை செய்து விடுவார்.

யானையை வாகனமாகக் கொண்ட இவருக்கு, பிடித்த உணவு கொண் டைக் கடலை தானியம். இதனால் தான் வியாழ பகவானுக்கு கொண்டைக் கடலை மாலை சூட்டி வழிபாடு செய்கிறார்கள். நவரத்தினங்களில் புஷ்பராகத்தை அணிந்திருப்ப வர்.

அரச மரம் இவருக்கு பிடித்தமான மரம். இனிப்பு சுவை பிடிக்கும். நான்கு சக்கரங்கள் கொண்ட ரதத்தில் நாற்கோண பீடத்தில் எழுந்தருளி இருப்பார். ரதத்தின் ஓரத்தில் வில்லும், மீனும் அடையாளமாக இருக்கும். தனுசு இராசிக்கும், மீன இராசிக்கும் இவர் அதிபதி என்பதை எடுத்துக் காட்டும் அடையாளம் அவை.

நீதி சாஸ்திரங்களை அறிந்த குரு பகவான் ஒருவருக்கு எந்த அளவு அதிர்ஷ்டத்தை வழங்கலாம் என்பதை நிர்ணயம் செய்வார்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 24 மணி நேரத்தில் மேலும் 149 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியதற்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரப் பகுதியில் 149 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக இதுவரையான காலப் பகுதியில் 52 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ள னர். அவர்களில் 45 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகவும், 7 ஆயிரம் பேர் மீது வழக்குத் தொடரப்பட உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார். (நி-5)

## ஐக்கிய அரபு அமீரகத்துக்குள் நுழைவதற்கான தடை நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகள், ஐக்கிய அரபு அமீரகத்துக்குள் நுழைவதற்கான தடை நாளை மறுதினம் வரை நீடிக்கப்பட்டுள்ளது .இவ் அறிவித்தல் ஐக்கிய அரபு அமீரக அதிகாரிகளால் தமக்கு விடுக்கப்பட்டுள்ளதாக டுபாயை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது. கடந்த 14 நாட்களுக்குள் மேற்குறிப்பிட்ட நாடுகளுக்குச் சென்ற பயணிகளும் ஐக்கிய அரபு அமீரகத்தின் எந்த இடத்துக்கும் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## மேலும் 1.6 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள்

(கொழும்பு)

இலங்கைக்கு மேலும் 1.6 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் நாளை கிடைக்கவுள்ளதாக கொழும்பிலுள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது. இந்தத் தடுப்பூசிகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளதாக அந்த தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 180 | 130 | 180 | 250 |
| தக்காளி | 100 | 120 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 180 | 170 | 160 | 200 |
| கரட் | 180 | 160 | 160 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 120 |
| புடோல் | 100 | 80 | 100 | 160 |
| வாழைக்காய் | 40 | 70 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 240 | 350 | 250 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 100 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 200 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 130 | 160 | 180 | 180 |
| பயற்றங்காய் | 160 | 140 | 120 | 120 |
| லீக்ஸ் | 200 | 210 | 180 | 240 |
| பீற்றூட் | 120 | 140 | 120 | 200 |
| கறிமிளகாய் | 300 | 320 | 240 | 350 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 350 | 240 |
| போஞ்சி | 180 | 240 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 50 | 60 |
| தேசிக்காய் | 120 | 120 | 150 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60 | 50-70 |
| இராசவள்ளி | -- | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | 250 | 180 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 90 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 20 |
| ஈரப்பலா | 30 | 50 | 100 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நேர்மையான யாசகன்



ஒரு மனிதன், தனக்கு கிடைக்கும் அதிர்ஷ்டத்தை, எப்படி பயன்படுத்திக் கொள்கிறான் என்று அறிய, மன்னர் கஜேந்திரனுக்கு ஆவல் ஏற் பட்டது.

ஒரு நாள், இரண்டு ரொட்டித்துண்டுகளை எடுத்துவரக் கூறி, அவற்றில், ஒன்றினுள் விலையுயர்ந்த வைரக் கற்களை, பதுக்கி வைத்தார்.

பின், இரண்டு ரொட்டித் துண்டு களையும், பணியாளனிடம் கொடுத்து, "கவனமாக கேள் தகுதியுள்ள, கண்ணியமான மனிதன் ஒருவனுக்கு, இந்தக் கனமான ரொட்டியைக் கொடு. மற்றொரு ரொட்டியை, ஒரு சாதாரண யாசகனுக்கு கொடு" என்று கூறினார்.

நீண்ட மேலங்கி அணிந்து, அடர்ந்த தாடியுடன், சாமியாரைப் போல் தோற்றமளித்த ஒரு நபருக்கு, அந்த வைரக்கற்கள் நிரம்பிய, கனமான ரொட்டியை அளித்தான் பணியாளன். மற்றொன்றை, ஒரு யாசகனுக்கு அளித்தான்.

அரண்மனை மேல் மாடத்திலிருந்து பார்த்தபடியே இருந்தார் மன்னர்.

சாமியார் போன்று தோற்றமளித்த நபர், தனக்கு கிடைத்த ரொட்டியை உற்றுப் பார்த்தார்.

"இது, சரியாக, பக்குவப்படுத்தப் படாததால், கொஞ்சம் கனமாக உள்ளது" என்று எண்ணி, தன் அருகில் வந்த யாசகனை அழைத்து, "நண்பா... எனக்கு கிடைத்த ரொட்டி கனமாக உள்ளது. எனக்கு அவ்வளவு பசியில்லை. அதனால், இதை நீ எடுத்துக் கொள். உன்னுடையதை எனக்கு கொடு" என்றார். உடனே, தங்களுடைய ரொட்டிகளை மாற்றினர்.

இதைக் கண்ட மன்னர், "ஆஹா... என்ன கடவுளின் உள்ளம்! ஒரு தவ யோகிக்கு செல்வம் தேவை இல்லையாதலால், வைரக்கற்கள் உடைய ரொட்டி, அவரிடம் தங்காமல், அந்த ஏழையிடம் சென்று விட்டது" என்று நினைத்தார்.

(தொடரும்)

# மகாபாரதம்




மகிழ்ச்சியில் இருக்கும் மனிதர்கள் தங்கள் அறியாமையால் துக்கத்தை தாங்களாகவே வரவழைத்துக் கொள்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களைப் போலவே நீங்கள் இப்போது நடக்கிறீர்கள். மிகவும் மகிழ்வுடன் இருக்க வேண்டிய நேரத்தில் துக்கத்தை அடைந்துள்ளீர்.

நாம் கடந்து வந்த பாதையை சற்று எண்ணிப் பாரும். நம் கண்ணெதிரிலேயே, வீட்டு விலக்காக ஒற்றை ஆடையில் இருந்த திரௌபதியை அவையில் இழுத்து வந்தானே கொடியவன் அந்தக் கொடுமையை எப்படி மறந்தீர்?

நாட்டைவிட்டுச் சென்று காட்டில் நாம் அடைந்த வேதனையை மறந்து விட்டீரா. அஞ்ஞாத வாசத்தில் திரௌபதியை கீசகன் காலால் உதைத்தானே அந்தத் துயரக் காட்சியை எப்படி மறந்தீர்?

பீஷ்மர், துரோணர் ஆகிய புறப் பகையை வெற்றி கொண்ட நீர் அகப் பகையை வெல்ல முடியாது தவிப்பது ஏன்? இந்த மனப் போராட்டத்தில் வில்லும், அம்பும் வாளும் உறவினரும் நண்பரும் ஒன்றும் செய்வதற்கில்லை.

இம்மனத்தை அடக்கும் முயற்சியில் நீரே தான் ஈடுபட வேண்டும். தெளிவற்ற குழம்பிய நிலையில் உள்ள மனம் ஒரு நிலையில் நிற்காது. உமது மனப் போராட்டம் வீணானது. நீர் ஈனக் கவலையை விட்டொழித்து நீதி நெறி வழுவாமல் அரச பாரத்தை ஏற்பீராக!

தெய்வ பலத்தாலும் திரௌபதியின் அதிர்ஷ்டத்தாலும் துரியோதனன் இனத்தோடு அழிந்தான். இனியும் சிந்திக்க என்ன உள்ளது? விதிப்படி அஸ்வமேத யாகம் செய்வீர்.

நாங்களும், கண்ணபிரானும் இருக்கும் வரை உமக்கு என்ன குறை?" என்றான். பீமனுக்கு தருமர் பதிலுரைக்கத் தொடங்கினார்.

**தருமர் கூறியது**

அரசாட்சி அரசாட்சி என அலைகிறாயே நன்கு சிந்தித்துப் பார். இந்த உலகின் நிலைமையைப் புரிந்து கொள்.

கானகத்தில் வேட்டையாடும் வேடனுக்கு வயிறு ஒன்றுதான். இந்த பூமி முழுதும் அரசனாக இருந்து ஆட்சி புரியும் மன்னனுக்கும் வயிறு ஒன்று தான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எல்லா இடங்களிலும், எல்லா மனிதர்களிடமும் உண்மையாக நடந்துகொண்டால் உங்கள் உணர்ச்சிகள் இயற்கையிலேயே சமமாக இருக்கும்.*
*– பரத்ஜி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தாழ்வாரம் இல்லை தனக்கொரு வீடில்லை தேவாரம் ஏதுக்கடி குதம்பாய்

குதம்பைச் சித்தர் என்பவர் சித்தர் வரிசையில் முதன்மையானவர். அவர் பாடிய பாடல்கள் உள்ளும் புறமும் வேறுபட்ட அர்த்தங்களைத் தரவல்லவை.

அவ்வாறு அவர் பாடிய ஒரு பாடல் ***தாழ்வாரம் இல்லை தனக்கொரு வீடில்லை தேவாரம் ஏதுக்கடி*** என்பதாகும்.

இப்பாடல் தருகின்ற உள்ளார்ந்தப் பொருள் வேறாக இருப்பினும் அதன் வெளித்தோற்றம் தரக்கூடிய பொருள்; ஒரு வீடில்லை, ஒதுங்குவதற்கு ஒரு தாழ்வாரம் இல்லை. அப்படியாக இருக்கும் நீவிர் தேவாரம் பாடிக் கொண்டிருந்தால், ஆவதென்ன என்பதாக அமைகிறது.

இந்தப் பாடல் வெளித்தோற்றத்தில் தருகின்ற பொருள் தர்க்கரீதியானது. யதார்த்தமானது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அதாவது நீ வாழ்வதற்கு அடிப்படை வீடு. அந்த வீட்டை உருவாக்குவது உனது அத்தியாவசியப் பணி. இதைவிடுத்து சதா தேவாரம் பாடியபடி இருந்தால், உனக்கு வீடே இல்லாமல் போகும் என்பதை குதம்பைச் சித்தர் உணர்த்துவதாகப் பொருள் கொள்ளலாம்.

ஆக, வீடு என்பது மனித வாழ்வின் அடித்தளம். வீடு என்ற **இல்** இடத்தில் இருந்து இல்வாழ்க்கை அமைகிறது.

ஆக, ஏழை பணக்காரன் என்ற பேதமைகள் கடந்து வீடு என்ற சொற்பதம் சாதாரண வீட்டையும் மாடமாளிகையையும் சமப்படுத்துகின்ற சமதர்மச் சொல்லாக அமைகிறது.

எனவே வீடு என்பது அனைவருக்கும் உரியது. அதிலும் ஒருவேளை உணவை உண்பதற்குக்கூட ஏதும் இல்லை என்றிருக்கக் கூடிய ஏழைக்கும் வீடு அவசியம் என்பதை எவரும் நிராகரித்துவிட முடியாது.

இருந்தும் வீட்டுத்திட்டம் என்று வரும் போது ஏழை மக்களை அதிலும் பாமர மக்களை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களும் அதிகாரிகளும் அலட்சியம் செய்வதைக் காண முடிகிறது.

உதாரணத்துக்கு ஒரு சம்பவம். இடம் – நாயன்மார்கட்டு. ஓர் ஏழைக் குடும்பம் சொந்த நிலத்தில் ஒரு சிறிய வீட்டில் வசித்து வருகிறது.

தாய், தந்தை, பிள்ளைகள் என ஆறு அங்கத்தவர்கள்.

அவர்களுக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை. காரணம் அவர்கள் குடியிருப்பது நெற்பரப்பிலாம்.

ஆம், நிலப்பரப்பில் வீடு கட்டுவதாக இருந்தால் மட்டுமே வீட்டுத் திட்டம் என்றால், நிலம் ஏதுமற்ற – நெற்பரப்பில் மட்டும் சிறிய காணி இருக்கக்கூடிய ஏழைக் குடும்பம் அந்த நெற்பரப்பில் வீடு கட்டுவது தவறா.

தவிர, பல வருடங்களாக அந்த நெற்பரப்பில்தான் அவர்களின் குடும்பம் வசித்து வருகிறது.

நெற்பரப்பில் வீடு கட்ட முடியாது என்று இறுக்கமாக நிற்பவர்கள்; செம்மணிப் பக்கம் போனதில்லையா? அல்லது யாழ்ப்பாண நகரத்தின் அத்தனை நிலங்களும் நெற்பரப்புப் பதிவில் இருப்பது பற்றித் தெரியாதா?

ஆக, ஏழைக்கு ஒரு வீடு கிடைப்பதற்கு இதுவே தடையாக இருந்தால்; இந்த உத்தியோகத்தர்கள் ஏதுக்கடி குதம்பாய் என்று பாடியிருப்பார் குதம்பைச்சித்தர் இன்றிருந்தால்.

## ரிஷாத்தின் வீட்டில் பணியாற்றி உயிரிழந்த சிறுமியின் மரணம் தொடர்பில் 30 பேரிடம் விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் சிறுமி உயிரிழந்த விவகாரம் தொடர்பிலான தொடர் விசாரணையின் பின்னர் இன்று சில தடயப்பொருட்கள் மீட்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரிசாத் பதியுதீனின் மனைவி, மாமனார் உட்பட்ட 30 பேரிடம் தொடர் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுவரும் நிலையில்,

நேற்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் முதித்த விதான பத்திரண உள்ளிட்ட அதிகாரிகள் ரிசாத் பதியுதீன் வீட்டில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

இதன்போதே சில முக்கியமான தடயப் பொருட்கள் சிக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மண்ணெண்ணெய்போத்தல் ஒன்று, லைட்டர் ஒன்று, எரிந்த நிலையில் மீட்கப் பட்ட ஒருசோடி பாதணி என்பன தடயங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன.

குறித்த தடயப் பொருட்கள் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணையைத் தொடங்கியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவருடைய உடலில் 75 வீதமான பாகங்கள் எரிந்தநிலையில் காணப்பட்டமையால் அவரிடம் வாக்குமூலம் பெற முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஞா)

## எதிர்வரும் 8 ஆம் திகதி சந்நிதியானுக்கு கொடியேற்றம்

(குப்பிழான்)

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்.வடமராட்சி ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்தும் பதினைந்து தினங்கள் நடைபெறும் இவ்வாலய மஹோற்சவத்தில் பத்தாம் திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் பூங்காவனத் திருவிழாவும், 18 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணியளவில் கைலாச வாகனத் திருவிழாவும், எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல்-6 மணியளவில் சப்பரத் திருவிழாவும், 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணியளவில் தேர்த் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும், அன்றைய தினம் மாலை 6 மணியளவில் மௌனத் திருவிழாவும் இடம்பெறும்.

இதேவேளை, மஹோற்சவ காலங்களில் காலைத் திருவிழா தினமும் காலை 7 மணிக்கும், இரவுத் திருவிழா மாலை 5 மணிக்கும் ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஞா-18)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### ஐந்திணைப்புப் பண்பாடு



தற்சோதனை என்பது தன்னைப் பற்றி ஆராய்தல் என்று விளங்கும். தன்னைப் பற்றிச் சிந்தித்தல், தன் குறையுணர்தல், தான் திருத்தம் பெறத் திட்டம் வகுத்தல், வகுத்த வழியே செயலாற்றி வெற்றி பெறுதல் என்பன எல்லாம் தற்சோதனைப் பயிற்சியில் அடங்கும்.

தற்சோதனையை நான்கு பிரிவுகளாக்கி ஒவ்வொன்றாகப் பயிற்சியளிக்கப்படுகின்றது. முதற் பயிற்சி "நான் யார்?" என்ற வினாவினை எழுப்பி விடைபெறுதலாகும். உடல், உயிர், அறிவு, மெய்ப்பொருள் என்ற நான்கும் இணைந்தே மனிதன் என்ற இயக்கமாக விளங்குகிறது. இந்த நான்கு நிலைகளைப் பற்றி விளக்கத்தின் மூலமும், சிந்தனையின் மூலமும் உணர்ந்து கொள்வதே மெய்யுணர்வாகும்.

இரண்டாவது பயிற்சி எண்ணம், சொல், செயல் இவற்றை ஒழுங்குபடுத்துவதாகும். தனக்கும், பிறர்க்கும், தற்காலத்திலும், பிற்காலத்திலும் அறிவிற்கும் உடல் உணர்ச்சிக்கும் துன்பம் எழாத அளவிலும், முறையிலும் எண்ணம், சொல், செயல் மூன்றையும் பண்படுத்திப் பயன் பெறுதலாகும்.

மூன்றாவது பயிற்சி அறுகுணச் சீரமைப்பு. பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் எனும் ஆறு குணங்களையும் நிறைமனம், சகிப்புத்தன்மை, ஈகை, கற்பு, நேர் நிறை விளக்கம், மன்னிப்பு என்ற ஆறு நற்குணங்களாக மாற்றும் பயிற்சி முறையே அறுகுணச் சீரமைப்பாகும். மனிதன் உணர்ச்சி வயப்படும்போது தான் அவன் ஆறு தீய குணங்களாக மாறுகிறான். அறிவின் வயம் நின்ற மாறாத விழிப்பு நிலை பெற்றால் உணர்ச்சி வயமாக மாற வழியே இல்லை. மனித இனப் பண்பாட்டிற்கு அறுகுணச் சீரமைப்பு இன்றியமை யாததாகும்.

நான்காவது பயிற்சி கவலை ஒழித்தல். அறியாமை, உணர்ச்சி வயமாதல், சோம்பேறித்தனம் இவற்றால் செயல் தவறுகளும் கணிப்புத் தவறுகளும் ஏற்படுகின்றன. இவைகளையெல்லாம் ஆராய்ந்து முறைப்படி எல்லாக் கவலைகளையும் ஒழித்து நலம் பெறக் கவலையொழித்தல் என்ற பயிற்சி நன்கு உதவுகின்றது. குண்டலினி யோகத்தால் விழிப்பு நிலை பெற்று தற்சோதனைப் பயிற்சி முறையால் மனத்தூய்மையும், வினைத்தூய்மையும் உண்டானால், அவற்றின் அடிப்படையில் ஒழுக்க உணர்வு, கடமையுணர்வு, மெய்ப்பொருள் உணர்வு என்ற மூன்றும் இயல்பாக வந்துவிடும். எனவே, இத்தகைய பண்பாட்டின் பயிற்சி முறையை "ஐந்திணைப்புப் பண்பாடு" என்று வழங்குகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பது ஒரு சமூகத்தின் பாரிய பொறுப்பு

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி

(கொழும்பு)

**சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் துன்புறுத்தல் மற்றும் சிறுவர் அடிமைத்தனம், பெயர் எதுவாக இருந்தாலும் அதை நிபந்தனையின்றி எதிர்ப்பது ஒரு சமூகத்தின் பொறுப்பாகும் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.**

மேலும் சிறுவர்களுக்கு எதிரான இத்தகைய முறைகேடுகளைத் தடுக்கவும், அத்தகைய நபருக்கு எதிராக எதிர்ப்பு தெரிவிப்பதைத் தவிர்த்து சட்டத்தை அமுல்படுத்தவும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் தேவை உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குற்றவாளிகளுக்கு அவர்களின் சமூக அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் சட்டத்தை விரைவாக அமுல்படுத்த வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் அடிமைத்தனம் தொடர்ந்து சிறுவர்களின் முழு வளர்ச்சி திறனை அடைய முடியாத சூழலை உருவாக்கி வருவதாகவும் நீண்டகால உடல் மற்றும் மன குறைபாடுகளுக்கு ஆளாகக் கூடிய நிலை காணப்படுகிறது.

துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சிறுவர்கள் பெரியவர்களாக ம்மாறியவுடன் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை மீண்டும் உருவாக்கப்படுவது தவிர்க்க முடியாதது. இதனால் சிறுவர் துஷ்பிரயோகத்தின் தீய சுழற்சியைத் தொடர்கிறது.

சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான வன்முறை சமுதாயத்தில் மதிப்புகள் மோசமடைவதையும் பாலின சமத்துவமின்மையையும் காட்டுகிறது.



எனவே இதுபோன்ற சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்கு பெண்கள் மட்டுமல்ல, அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியம்.

இறந்த இஷாலினிக்கு நீதியை விரைவாக நிறைவேற்றுவது எதிர்காலத்தில் இதுபோன்ற துன்புறுத்தல்களிலிருந்து சிறுவர்களைப்பாதுகாக்க வழிவகுக்கும் என்று நம்புவதாகவும் தெரிவித்தார். (நி-5)




இந்தியாவின் சென்னையில் உள்ள Integral Coach Factory தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட 30 ரயில் பெட்டிகள் கப்பல் மூலம் கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

160 ரயில் பெட்டிகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளன. இதில் முதல் கட்டமாக 10 பெட்டிகள் கடந்த மார்ச் மாதம் கொண்டுவரப்பட்ட நிலையில் நேற்று 2 ஆம் கட்டமாக 30 ரயில் பெட்டிகள் கொண்டுவரப்பட்டுள்ளன.


# கொவிட் தொற்றுக்கு உள்ளான 51 சிறுவர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

கொவிட் வைரஸ் தொற்றிய 51 சிறுவர்கள் கொழும்பு றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் நோய்கள் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த சிறுவர்களில் கொவிட் தொற்றிய நிலையில் 12 பேர் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கு கொவிட் வைரஸ் தொற்றும் நிலைமை அதிகரித்துள்ளதை காண முடிவதாகவும் சிறுவர்கள் கொவிட் தடுப்பூசி வழங்கப்படாத தரப்பினர் என்பதால் தற்போது சிறுவர்களைப் பாதுகாப்பாக பராமரிக்க வேண்டும் எனவும் தீபால் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)



சிறுமி இஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரியும் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வன்முறைகளுக்கு எதிராகவும் கொட்டகலையில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

# அரசாங்கத்தின் வருவாய் பற்றாக்குறை 6441 கோடி ரூபாயாக அதிகரிப்பு

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரச வருமான பற்றாக்குறையானது 6 ஆயிரத்து 441 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதனடிப்படையில் கடந்த 2020 ஆம் ஆண்டு முதல்நான்கு மாதங்களில் 34 ஆயிரத்து 395.2 கோடியாக இருந்த வருவாய் பற்றாக்குறையானது 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 40 ஆயிரத்து 836.2 கோடி ரூபாய் என குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.

அரச வருமானமானது அரசின் அன்றாட செலவுகளைக் கூட ஈடு செய்ய முடியாத அளவுக்கு பற்றாக்குறையாக இருப்பதுடன் இந்த நிலைமையானது 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மேலும் அதிகரித்துள்ளதால், அரச வருமான பற்றாக்குறை உயர்ந்துள்ளது.

2020 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரச வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை 45 ஆயிரத்து 217.5 கோடி ரூபாயாக காணப்பட்டதுடன் அது 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 52 ஆயிரத்து 054.3 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

நிதியமைச்சு வெளியிட்டுள்ள 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான நிதி நிலை அறிக்கையில் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (நி-5)

# 25 லட்சம் பெறுமதியுடைய ஹெரோயினுடன் ஐவர் கைது

(கொழும்பு)

நாட்டில் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் சுமார் 25 இலட்சம்ரூபாய்பெறுமதியான ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களுடன் 5 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகபேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-5)

# சுற்றுலா வலயங்களை மையப்படுத்தி உள்நாட்டு விமான நிலையங்கள்

## சுற்றுலாத்துறை அமைச்சு ஆராய்வு

(கொழும்பு)

சுற்றுலா வலயங்களை மையப்படுத்தி,ஐந்து உள்நாட்டு விமான நிலையங்களை அபிவிருத்தி செய்வது குறித்து, சுற்றுலாத்துறை அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

கொவிட்-19 பரவலின் பின்னர், நாட்டில் சுற்றுலாத்துறையை மீளக் கட்டியெழுப்பும் போது, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கும், புதிய உபாயமாக இந்த நடவடிக்கை செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, சிகிரியா, கொக்கலை, அம்பாறை, அநுராதபுரம் மற்றும் கிராந்துருகோட்டை முதலான பிரதேசங்களை மையப்படுத்தி, உள்நாட்டு விமான நிலையங்களை அபிவிருத்தி செய்வ தற்கு சுற்றுலாத்துறை அசைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1656 பேருக்கு...

அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள அனைவரும் புதுவருட கொத்தணியுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 296,506 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## பெண் ஒருவர்...

வரே இவ்வாறு வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-30)

## 45 பேர்...

45 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறித்த தகவலை நேற்று வெளியிட்டுள்ளார்.

இதனால் இலங்கையில் இதுவரையில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோர் எண்ணிக்கை 4,099 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## வெலிக்கடைப்...

அஞ்சலி செய்யப்பட்டது.

இதில் தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா, தமிழ் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா-33)

## கபிடல் குழுமத்...

பாதிக்கப்பட்ட அவர், தனியார் வைத்தியசாலை தொற்று நோயியல் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

தி கபிடல் மகாராஜா குழுமத்தின் கீழ் நாட்டில் பல்வேறு நிறுவனங்களை அதன் தலைவர் ஆர்.ராஜமகேந்திரன் மற்றும் அவரது குடும்பத்தினர் நிர்வகித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த சின்னத்தம்பி ராஜேந்திரம் கப்பிடல் மகாராஜா நிறுவனத்தின் நிறுவுனராவார். அவரது மகனே ஆர்.ராஜமகேந்திரன் என்பவராவார். (ஞா)

## இளைஞர் குழு...

மேலும் தெரியவருகையில்,

குறித்த பகுதியில் மதுபோதையில் நின்றிருந்த ஐந்து பேர் கொண்ட இளைஞர் குழுவினர் அப்பகுதியில் நின்ற பொது மக்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பி சென்றுள்ளனர்.

சம்பவத்தில் பெண் உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை ஈச்சங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-299)

## தடுப்பூசி போட்ட...

தெரிவித்தார்.

அதன்பிறகு நாடு முழுமையாகத் திறக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டில் கோவிட்-19 நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கோவிட் -19 தடுப்பூசி போடப்படாத நபர்கள் என்பது தெரியவந்துள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார். (ஞா)

## இளைஞனை...

பகுதியில் 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 பேர் கொண்ட வாள்வெட்டுக் குழு வீதியால் சென்று கொண்டிருந்த இளைஞனை வழிமறித்து வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியிருக்கின்றது.

சம்பவத்தில் த.நிரோஸன் (வயது-25) என்ற சுன்னாகம் கந்தரோடை பகுதியை சேர்ந்த இளைஞனே வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஞா)

## பயணக் கட்டுப்...

உள்ளிட்டவற்றில் பங்கேற்பவர்களின் எண்ணிக்கை குறைந்தது 50-60 வரம்பில் வைக்கப்பட வேண்டும் அல்லது தற்போதுள்ளதைவிட குறைந்த மட்டத்தில் இருக்கவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

டெல்டா திரிபு அடுத்த மாதத்திற்குள் நாட்டில் வைரஸின் பிரதான திரிபாக மாறும்...

### முகக்கவசம் அணியாதவர்கள் தொடர்பில்

# இன்று முதல் பொலிஸார் விசேட கண்காணிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலும் குறிப்பாக கொழும்பு மாவட்டத்திலும் இன்று திங்கட்கிழமை முதல் முகக்கவசம் அணியாத மற்றும் முறையாக முகக்கவசம் அணியாத நபர்கள் தொடர்பில் பொலிஸார் விசேட கண்காணிப்புக்களில் ஈடுபடவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன்போது மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகளை மீறி மேல் மாகாணத்திலிருந்து வெளியேற அல்லது மேல் மாகாணத்திற்குள் பிரவேசிக்க முற்பட்ட 99 வாகனங்களில் பயணித்த 150 நபர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ஞா)

அபாயம் உள்ளது என்றும் சிறப்பு மருத்துவ வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார். (ஞா)

## ஆசிரியர் கோவிட்...

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

ஆசிரியர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு இதுவரை 2 வாரங்கள் கூட முழுமை பெறவில்லை. முதலாம் தடுப்பூசி செலுத்தப்பட்டு 6 வாரங்கள் ஆகும்போது உடலில் எதிர்ப்பு சக்திகள் உண்டாகும்.

எனவே, தற்போது வீதியில் கூட்டமாக இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் எந்தவொரு ஆசிரியரின் உடலிலும் கோவிட் எதிர்ப்புடல்கள் உருவாகியிருக்காது.

டெல்டா திரிபு பரவிவரும் காலக் கட்டத்தில் ஆசிரியர்கள் மிகவும் ஆபத்தான வகையில் செயற்படுகின்றனர். இதன் பிரதிபலனாக இன்னும் ஓரிரு வாரங்களில் ஆசிரியர்கள் கொத்தணி ஒன்று உருவாவதை நாம் காணக்கூடியதாக இருக்கும் என்றார்.

இதேவேளை, கடந்த மூன்று வாரங்களாக நாட்டில் பதிவான கோவிட் மரணங்கள் பற்றிய ஆய்வில், கோவிட் நோய்த்தொற்று காரணமாக உயிரிழப்பவர்களில் பெரும்பாலானோர் தடுப்பூசி செலுத்தியிருக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

நோய்த்தொற்று மற்றும் திரிபு தொடர்பில் துல்லியமாக அடையாளம் காண பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாத பின்னணியில் மற்றொரு கொரோனா அலை ஏற்படக்கூடும் என்று மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

இதேவேளை, அளுத்கம - கலுவாமோதர, பயாகல...

முல்ல மற்றும் மொரகல்ல பகுதிகளில் வசிக்கும் 143 பேர் எழுமாறான சோதனைக்கு உட்படுத்தப்பட்டதையடுத்து, 47 பேர் கோவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஞா)

## புதிய கொரோனா...

துடன், வைரஸுக்கு எதிராக தடுப்பூசி போடுமாறும் இராஜாங்க அமைச்சர் மக்களை வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் புதிய கொரோனா வகைகள் உருவாகலாம். அவை சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும்.

எனவே அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட சுகாதார வழிகாட்டல்களை மக்கள் பின்பற்றுவது மிகவும் அவசியம் என வலியுறுத்தியுள்ளார். (ஞா)


தன நிதானய
திகதி - 2021.07.25
சீட்டிழுப்பு இலக்கம் - 546
Y 03 12 28 71

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 25.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2811
Q 05 11 43 79

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/07/25 — சீட்டிழுப்பு இலக்கம் 1603
சுப்பர் இலக்கம் 11 — வெற்றி இலக்கங்கள் 18 33 50 55

மஹஜன சம்பத
திகதி 2021/07/25
சீட்டிழுப்பு இலக்கம் 4516
S 0 6 0 0 9 2

மெகா பவர்
திகதி 25/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0864
P 04 — 26 27 52 57

வசனா செரிய — சீட்டிழுப்பு இலக்கம் 735 — மஞ்சள் — 25.07.2021 ஞாயிறு
P 11 40 50 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,232,490
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி — கிழமை: ஞாயிற்றுக்கிழமை — சீட்டிழுப்பு இல: 1319 — வர்ணம்: பச்சை — சீட்டிழுப்பு திகதி: 25.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,233,846
வெற்றி இலக்கங்கள் 04 18 24 56 — U

சனிதா — கிழமை: ஞாயிற்றுக்கிழமை — சீட்டிழுப்பு இல: 8654 — வர்ணம்: இளஞ் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி: 25.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,625,720
வெற்றி இலக்கங்கள் 08 44 63 66 — X

ராசி — சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி: 25.07.2021 — வெற்றி வாரம்: 3205 — வர்ணம்: ஊதா
வெற்றி இலக்கங்கள் 07 27 43 48 — மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,756,837/=

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1493 — நிறம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 25/07/2021 — தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் A 48 63 64 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் 60,254,232/=


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஆசிரியர், அதிபர் தொழிற் சங்கங்களுடன்
# நாளை பேச்சு நடத்தப்படும்
## கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள பிரச்சினை உள்ளிட்ட பல கோரிக்கைகளின் அடிப்படையில் அமைச்சரவைப் பத்திரம் இன்று முன்வைக்கப்படுகிறது என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடந்து வரும் கொரோனாத் தொற்று நோயைக் கருத்தில் கொண்டு வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டு, மாணவர்களுக்கான இணையவழிக் கற்பித்தல் மீண்டும் தொடங்கப்படவேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பான அமைச்சரவை ஆய்வறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த விவகாரங்கள் தொடர்பாக அமைச்சரவை எடுக்கும் முடிவுகள் குறித்து தெரிவிக்க ஆசிரியர்கள், அதிபர் தொழிற் சங்கங்கள் நாளை செவ்வாய்க்கிழமை அழைக்கப்பட்டு பேச்சு நடத்தப்படும் என்றும் பேராசிரியர் கபில பெரேரா குறிப்பிட்டார். (ஞா)

## மாவட்டரீதியில்
## சமையல் எரிவாயு சிலிண்டரின்
# நிர்ணய விலை அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சந்தையில் விற்கப்படும் அனைத்து சமையல் எரிவாயு சிலிண்டர்களின் எடையை கிலோ கிராமில் காண்பிப்பது கட்டாயமாக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 18 லீற்றர் (9.6 கிலோ) சமையல் எரிவாயு சிலிண்டரின் அதிகபட்ச சில்லறை விலை ஆயிரத்து 150 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆயிரத்து 259 ரூபாயாகவும் வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 216 ரூபாயாகவும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 243 ரூபாயாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 242 ரூபாயாகவும் மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 234 ரூபாயாகவும் திருகோணமலை மாவட்டத்தில் ஆயிரத்து 217 ரூபாயாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரத்து 250 ரூபாயாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஞா)

# ரிஷாத்துக்கு எதிராக மொட்டு கட்சியினர் போர்க்கொடி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த சிறுமி மர்மமான முறையில் உயிரிழந்ததைத் தொடர்ந்து ரிஷாத்துக்கு எதிராக ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியிலிருந்து ரிஷாத் பதியுதீனை வெளியேற்றுவதற்கு கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறு செய்துவிட்டு, நீதிக்காக குரல் கொடுப்பதே பொருத்தமான செயற்பாடாக அமையும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படும் என்றும், குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார். (ஞா)

**தவறிவிட்டது**

சபாரத்தினம் கிருசாந்தன் ஆகிய என்னுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் நல்லூருக்கும் சண்டிலிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அறியத்தரவும் (C-2416)

078 913 5735

**வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழில் இயங்கிவரும் பான்சி கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.)
தொடர்புகொள்ளும் நேரம்
9.30 மணி - 4.00 மணி வரை (7452)

☎-077 468 3354

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (7451)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 6113**

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 3536**

**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- **076 443 1576** (C-2413)

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்யும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (7449)

**U.S.A பாம்**
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

**கனடா-STUDENT VISA**

A/L எடுத்த மாணவர்கள் குறைந்த செலவில் கனடாவில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள். (C-2385)

IELTS இலவசமாக கற்பிக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)

VISA APPLICATION

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

0777-068-777

**AGX**
**ஏற்றுமதியாளர்கள்**
ஆகாய,கடல் மார்க்கமாக
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
கனடா 650/=
லண்டன் 975/= (C-2386)
இல. 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 443 1578

**ICOF வளர்பிறை உளவளத்துணை நிலையம்**

Reg.No J/DS/SS/NGO/31 Since -1994

**ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துனர்களை உருவாக்கும் பயிற்சி நெறி**
( Personality Growth & Co- Counsellor's Training Programme)

வளர்பிறை உளவளத்துணை நிலையத்தில் புலமைவாய்ந்த வளவாளர்களினால் மனித ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துனர்களை உருவாக்கும் பயிற்சி நெறி 02.08.2021 அன்று எமது நிறுவனத்தில் ஏழாம் பிரிவினருக்கான (7th Batch) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சிக் காலம் : 100 மணித்தியாலங்கள், (9.00 மணி - 1.00 மணி) வகுப்புக்கள் நடைபெறும்.பயிற்சியின் பின்னர் எமது நிறுவனத்தின் பெறுமதியான கற்கை நெறிச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கல்வித் தகைமை : O/L, A/L
- விண்ணப்ப முடிவு : 30.07.2021
  தகுதியானவர்கள் தமது பதிவுகளை எமது அலுவலகத்தில் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
- அனுமதிக் கட்டணம் : 1,000.00 ரூபாய்

• குறிப்பு :- வகுப்புக்கள் இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.
1ஆம் பிரிவு- வாரநாட்கள் - 02.08.2021 ஆரம்பம்
2ஆம் பிரிவு- சனி,ஞாயிறு - 07.08.2021 ஆரம்பம் (7438)

**வளர்பிறை உளவளத்துணை நிலையம் (ICOF)**
இல. 05, பிளச்சஸ் லேன், சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு :- 077 266 0209, 021 222 8238

**அண்ணா** EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-2384)
070 3305500
077 888 9388
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை
பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லை
மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2383)
0768226240 DHL

**ஒத்துமாறல் - அபிவிருத்தி உத்தியோகத்தர்**

வவுனியா நகர எல்லைக்குள் உள்ள மாகாண அரச திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் நான் வடமராட்சி அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள அரச நிறுவனத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றேன். (C-2415)

தொடர்பிற்கு - 076 219 8600

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.